KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 33, 01 May 2026 இதழ்:- 17

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# போதிமரத்துப் புத்தரின் சீடர்கள் 22 பேர் 110 கோடி ரூபா போதைப் பொருளுடன் விமான நிலையத்தில் கைது!

தாய்லாந்திலிருந்து சுமார் 110 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய குஷ் மற்றும் ஹஷிஷ் ரக போதைப்பொருட்களைக் கடத்தி வந்த 22 தேரர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சனிக்கிழமை (25) இரவு 10.10 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து தாய் எயார் ஏசியா விமானம் மூலம் வருகை (5ம் பக்கம் பார்க்க)



## தீர்வு குறித்து பேசுதல் என்றால் என்ன?

# அரசியலமைப்பில் உள்ள 13ஐ நடைமுறைப்படுத்தக் கோருவதில் என்ன பிழை? கஜனுக்கு சுரேஷ் பதில் கேள்வி



மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடாத்துமாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தொடர்ந்து பிரசாரம் செய்து வருவதாக கஜேந்திரகுமார் முன் வைத்திருக்கும் குற்றச்சாட்டு தொடர்பில் கடும் விசனம் வெளியிட்டுள்ள அக்கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன், 'நிச்சயமாகக் கொண்டு வரப்படும் எனும் உத்தரவாதம் இல்லாத புதிய அரசியலமைப்பில் உள்வாங்கப்பட வேண்டிய தமிழர்களுக்கான அரசியல் தீர்வு பற்றிப் பேசுகிறோம். அவ்வாறிருக்கையில் ஏற்கனவே அரசியலமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்துமாறு கோருவதில் (6ம் பக்கம் பார்க்க)

## பேரறிவாளன்! மரண தண்டனை - ஆயுள் தண்டனை பெற்றவன் இன்று நீதியை நிலை நிறுத்தும் வழக்கறிஞர் ஆனான்!

இந்திய அரசியலின் இருண்ட அத்தி யாயங்களில் ஒன்றான இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கின் பின்னணியில் காலத்தின் கடுமையான சோதனைகளைச் சுமந்து நீதியின் நீண்ட பயணத்தை நெஞ்சில் தாங்கி வந்தவர் பேரறிவாளன் 1991ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மரண தண்டனையின் (3ம் பக்கம் பார்க்க)

# 2வது தடவையாகவும் கைவிடப்பட்ட தையிட்டி காணி அளவீடு! காணி உரிமையாளர்களின் ஒத்துழைப்பு இல்லை - மாவட்ட செயலகம்




THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*



## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

RE/MAX ACE REALTY INC., BROKERAGE — EXPERIENCE THE DIFFERENCE — INDEPENDENTLY OWNED & OPERATED

we are ace

## Siva Kandiah

Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

## Piravien Siva

Sales Representative B.Comm.

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



MLS


23 Years Real Estate Experience

150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada

**Bus: 416-293-4500**

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Adelaide Ave E / Simcoe St



**Oshawa** — $699,000

3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


### Kingston Rd & Sheppard Ave E



**Scarborough** — $710,000

3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area


### Islington Ave / Steeles Ave W



**Toronto** — $749,000

4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse


### Neilson Road & Sheppard



**Scarborough** — $839,000

4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!


### Danforth and Dawes



**Toronto** — $839,999

2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views


### Williamson & Westney



**Ajax** — $849,000

3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home


### Rogers and Dufferin St



**Toronto** — $849,999

3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom

### Markham Rd & Lawrence Ave



**Scarborough** — $999,000

3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow

### Harmony Road / Conlin Road



**Oshawa** — $999,000

4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom


### Cameo St / Burkolder Dr



**Pickering** — $999,900

3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home


### Hwy10 / Hwy 89



**Shelburne** — $999,900

5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

### Markham/Steeles



**Markham** — $999,999

3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

### Markham Rd/ Lawrence Ave E

FOR LEASE




**Scarborough** — $2,700

3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

### Markham Rd & Sheppard Ave

FOR LEASE



**Scarborough** — $2,250

1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

### Simcoe St/ Windfields Farm Dr

FOR LEASE



**Oshawa** — $1,500

1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

### Markham & Denison

FOR LEASE



**Markham** — $1,450

1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்படவாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# பேரறிவாளன்! மரண தண்டனை - ஆயுள் தண்டனை

## பெற்றவன் இன்று நீதியை நிலை நிறுத்தும் வழக்கறிஞர் ஆனான்!




இந்திய அரசியலின் இருண்ட அத்தியாயங்களில் ஒன்றான இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கின் பின்னணியில் காலத்தின் கடுமையான சோதனைகளைச் சுமந்து நீதியின் நீண்ட பயணத்தை நெஞ்சில் தாங்கி வந்தவர் பேரறிவாளன் 1991ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மரண தண்டனையின் நிழலைத் தாண்டி, ஆயுள் தண்டனையின் சங்கிலியையும் சுமந்து இறுதியில் 2022ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் விடுதலை பெற்று, இன்று சட்டத்தின் வழியில் நியாயம் பேசும் வழக்கறிஞராக உயர்ந்து நிற்பது வரலாறே வியக்கும் மாற்றமாகும்.

1999ம் ஆண்டு காலக் கட்டத்தில் 26 பேருக்கு ஒரே நேரத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட அந்த அதிர்ச்சிகரமான தருணம், மனித உரிமை வரலாற்றில் கரும் புள்ளியாகப் பதிந்தது. அந்த அநீதியை எதிர்த்து குரல் கொடுக்க, பழ. நெடுமாறன் ஐயா அவர்கள் தலைமையில் உலகளாவிய அளவில் எழுந்த ஒற்றுமைக் குரல் தமிழரின் மனச்சாட்சியின் வெளிப்பாடாகும்.

அந்த இயக்கத்தின் ஓர் அங்கமாக, கனடிய மண்ணில் இருந்து வெளிவரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 28.597.26 கனேடிய டொலர்களை திரட்டி அனுப்பிய செயல், வெறும் நிதியுதவி அல்ல அது நீதிக்காக எழுந்த மனிதநேயத்தின் சின்னமாகும். ஈழநாடு பத்திரிகை வழங்கிய அன்றைய காலத்தில் பெரு நிதியை நினைவு கூர்ந்து திரு நெடுமாறன் ஐயா அவர்கள் அனுப்பிய நன்றிக் கடிதம், காலத்தைத் தாண்டி பேசும் சாட்சியாகத் திகழ்கிறது.

இன்று அதே வழக்கில் தண்டிக்கப்பட்டு காலத்தின்சூழலில் துன்பத்தை அனுபவித்து, நீதியின் ஒளியில் விடுதலை பெற்று, சட்டத்தரணியாக பதிவு செய்துள்ள பேரறிவாளன் ஒரு மனிதனின் மறுபிறவியைப் போன்ற உயர்வாகும். இது ஒரு சாதாரண சாதனை அல்ல. இது சோதனைகளைச் சவால்களாக மாற்றிய மன வலிமையின் வெற்றி. சிறைச்சாலையின் சுவர்களுக்குள் சிக்கிய கனவுகள், இன்று நீதிமன்ற அரங்கில் நியாயம் பேசும் குரலாக மாறியுள்ளன.

அவரது பயணம், தண்டனை பெற்றவன் என்ற முத்திரையிலிருந்து நீதியை நிலை நிறுத்துபவன் என்ற உயர்ந்த அடையாளத்துக்கான மாற்றத்தின் சின்னமாகும். இன்றைய இளைஞர்களுக்கு இது ஓர் உற்சாகப் பாடமாகும் சூழ்நிலைகள் எவ்வளவு கடினமாக இருந்தாலும் மன உறுதியும் நேர்மையும் இருந்தால் மனிதன் தன்னை மீண்டும் உருவாக்க முடியும் என்பதற்கான சான்றாகும்.


26 தமிழர் உயிர்காப்பு வழக்கு நிதிக்குழு

(பழ. நெடுமாறன்)

வழக்கறிஞராகப் பதிவு செய்துள்ள பேரறிவாளனுக்கு கனடா ஈழநாடு வாசகர்கள் சார்பிலும் என் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துகள்!

அவரது குரல், இனி தனிப்பட்ட அனுபவத்தின் குரலாக மட்டுமன்றி, அநீதிக்கு எதிரான சமூகத்தின் குரலாக ஒலிக்கட்டும். நீதியின் பாதையில் அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும், மனித உரிமைகளின் வரலாற்றில் புதிய ஒளிக்கீற்றாக விளங்கட்டும். வாழ்க! வளர்க!

T.K.பரமேஸ்வரன் – ஈழநாடு

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# 2வது தடவையாகவும் கைவிடப்பட்ட தையிட்டி காணி அளவீடு!

## காணி உரிமையாளர்களின் ஒத்துழைப்பு இல்லை - மாவட்ட செயலகம்



தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணியை அளவீடு செய்யும் பணிகள் இரண்டாம் தடவையாக 28 ஏப்ரல் 2026 செவ்வாய்க்கிழமை கைவிடப்பட்டுள்ளது. தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணியின் காணி உறுதிகளோடு உள்ள உரிமையாளர்கள் 17 பேரினதும் காணிகளின் வரைபடத்தை கீறுவதற்கு அளவீடு செய்யும் பணிகளு க்கு காணி உரிமையாளர்கள் விகாரை பகுதிக்கு அழைக்கப்பட்டனர்.

அதற்காக விகாரை பகுதிக்கு வந்தவர்களை விகாரை அமைந்துள்ள பகுதிக்கு சற்று தொலைவில் பொலிஸார் வீதி சோதனை சாவடியை அமைந்து காணி உறுதிகள் அடையாள அட்டைகளை பரிசோதித்து தான் அனுமதிப்போம் என பொலிஸார் கூறியமையால், காணி உரிமையாளர்களுக்கும் பொலிஸாருக்கும் தர்க்கம் ஏற்பட்டது. அதனை அடுத்து அவ்விடத்திற்கு வருகை தந்த கிராம சேவையாளர் காணி உரிமையாளர்களை அங்கிருந்து விகாரை பகுதிக்கு அழைத்து சென்றார்.

அங்கு, காணி உரிமையாளர்கள் காணியை விடுவிக்கும் நோக்குடனையே காணிகளை அளக்கின்றோம் என எழுத்தில் உறுதி மொழி தர வேண்டும் என அதிகாரிகளிடம் கோரியதால் அவ்வாறு நாம் எழுத்தில் தர முடியாது என அதிகாரிகள் கூறியமையால் நீண்ட இழுபறி ஏற்பட்டது.

பின்னர் விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் வலி. வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான பவானி வீதி அமைந்துள்ளமையால் அவற்றினை அளவீடு செய்யும் பணிகள் இடம்பெற்றன. காணி உரிமையாளர்கள் காணிகளை விடுவிக்கும் நோக்குடனையே அளக்கின்றோம் என எழுத்து மூல உறுதி மொழி தராது விடின் காணிகளை அளவீடு செய்ய சம்மதிக்க மாட்டோம் என உறுதியாக நின்றமையால் காணி அளவீட்டு பணிகள் இரண்டாம் தடவையாக தடைபட்டது கடந்த 17ஆம் திகதி காணி அளவீட்டு பணிகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்ட வேளை விகாராதிபதி அதற்கு சம்மதிக்காது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையால் அன்றைய தினம் காணி அளவீட்டு பணிகள் நிறுத்தப் பட்டு இருந்த நிலையில் இன்றைய தினம் இரண்டாவது தடவையாக காணி அளவீட்டு பணிகள் முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் காணி உரிமையாளர்களின் கோரிக்கையை அதிகாரிகள் நிறைவேற்றாததால் அளவீட்டு பணிகள் கைவிடப்பட்டன.

தையிட்டி காணி அளவிடும் செயற்பாடு காணி உரிமையாளர்களின் ஒத்துழைப்பின்மையால் இடை நிறுத்தம் செய்யப்பட்டதாக மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவின் தையிட்டி தெற்கு பகுதியில் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் 17 காணி உரிமையாளர்கள் தமது காணி உரிமையினை கோரியிருந்தனர். இது தொடர்பில் புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் மூன்று கலந்துரையாடல்கள் இடம் பெற்றிருத்தன.

குறித்த கலந்துரையாடல்களின் பிரகாரம் காணி உரிமையாளர்களின் உறுதிகள் ஆவணங்கள் அங்கு சமர்ப்பிக்கப்பட்டு அவை செவ்வை பார்க்கப்பட்ட பின்னர் புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் காணியினை அளவீடு செய்வதற்காக இன்றைய தினம்(28.04.2026) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர், வைத்தியர் எஸ். ஸ்ரீ பவானந்தராஜா, கொழும்பிலிருந்து வருகை தந்த புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள், நிளஅவை திணைக்கள அதிகாரிகள், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் தலைவர், நில அளவையாளர்கள், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர்(காணி), திரு.கே.ஜெயகரன், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் திருமதி. சிவகங்கா, மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் திரு என்.தர்மபாலா, நில அளவையாளர்கள் உள்ளிட்ட குழுவினர் காணிகளை அளக்கச் சென்றிருந்தனர்.

17 காணி உரிமையாளர்கள் சார்பில் 42 பேர் காணியை அளவீடு செய்வதற்காக பிரதேச செயலாளரிடம் கோரியிருந்தனர்.

காணி உரிமையாளர்கள் கொழும்பிலிருந்து வருகை தந்த சிங்கள நில அளவையாளர்கள் தமது காணிகளை அளக்கக் கூடாது என்ற கோரிக்கை முன்வைத்திருந்தனர். பின்னர் காணிகள் விடுவிக்கப்படுதல் தொடர்பாக உறுதிப்படுத்தல் கடிதங்களில் கையொப்பமிடுமாறு கோரிக்கையினை முன்வைத்தனர். அவர்களின் கோரிக்கையினை குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட கடிதத்தில் அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் கையொப்பமிட்டு, பிரதேச செயலாளரின் பதவி முத்திரையுடன் கையொப்பமிடப்பட்ட கடிதத்தை வழங்கிய போது தெல்லிப்பளை பிரதேச செயலக கடிதத் தலைப்பிலே இக் கடிதம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு உட்பட வெவ்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் தெல்லிப்பளை பிரதேச செயலக கடிதத் தலைப்பிலே கையொப்பமிடுவதென்பது பொருத்தமற்றதென காணி உரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு கடிதத் தலைப்பில் கையொப்பமிட்டு தராத பட்சத்தில் காணிகளை அளவீடு செய்ய தம்மால் ஒத்துழைக்க முடியாது என அவர்கள் தெரிவித்ததை அடுத்து காணி அளவீட்டு பணியானது மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# போதிமரத்துப் புத்தரின் சீடர்கள் 22 பேர் 110 கோடி ரூபா போதைப் பொருளுடன் விமான நிலையத்தில் கைது! 22 சீடர்களை வழி நடத்திய தலைமைத் தேரரும் கைது!

தாய்லாந்திலிருந்து சுமார் 110 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய குஷ் மற்றும் ஹஷிஷ் ரக போதைப்பொருட்களைக் கடத்தி வந்த 22 தேரர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சனிக்கிழமை (25) இரவு 10.10 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து தாய் எயார் ஏசியா விமானம் மூலம் வருகை தந்த தேரர்களை அதிகாரிகள் சோதனையிட்டனர். இதன் போது அவர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் தொகை கண்டு பிடிக்கப்பட்டது.



ஒவ்வொரு தேரரின் பயணப் பொதியிலும் பாடசாலை உபகரணங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்களுக்கு நடுவே சூட்சுமமான முறையில் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மொத்தமாக 110 கிலோகிராமுக்கும் அதிக எடையுடைய போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சந்தை பெறுமதி சுமார் 110 கோடி ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப் பட்டுள்ளது.

ஒவ்வொரு தேரரும் சுமார் 5 கிலோ கிராம் போதைப்பொருளைத் தனித்தனியாகக் கொண்டு வந்துள்ளனர். இவர்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இளம் தேரர்கள் எனவும், உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்று வருபவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி தர்மகர்த்தா ஒருவரால் வழங்கப்பட்ட விமான பயணச்சீட்டுகள் மூலம் இவர்கள் தாய்லாந்து சென்றுள்ளனர். தாய்லாந்தில் தங்கியிருந்த போது இவர்கள் சாதாரண உடையில பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் அவர்களின் அலைபேசிகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலைய வரலாற்றில் இவ்வாறான பாரிய போதைப் பொருள் தொகை சிக்கிய முதல் சந்தர்ப்பம் இதுவெனக் கூறப்படுகிறது. அத்துடன், பெருமளவிலான தேரர்கள் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதும் இதுவே முதல் முறையாகும். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப் பட்டனர்.

## பிக்குகள் கைது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர்



கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் போதைப்பொருட்களுடன் காவி உடை அணிந்த பல பிக்குகள் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகள் தொடங்கப் பட்டுள்ளன என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். 27 ஏப்ரல் 2026 நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்குப் பிறகு ஊடகங்களிடம் பேசிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும், சட்ட நடவடிக்கைகளில் செல்வாக்குள்ளவர்களுக்கும் நலிந்தவர்களுக்கும் இடையே எந்தப் பாகுபாடும் காட்டப்படாது என்றும் வலியுறுத்தினார்.

இந்த சம்பவம் தொடர்பான விவரங்கள் ஏற்கனவே நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப் பட்டு விட்டதாகவும், நடைபெற்று வரும் விசாரணைகளின் அடிப்படையில் மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மகா சங்கத்தின் வழிகாட்டுதலின்படி அதிகாரிகள் செயல்பட்டு வரும் அதே வேளையில் சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். நாடு தழுவிய போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கட்டுநாயக்க விமான நிலையத்தில் 110 கிலோகிராமுக்கும் அதிகமான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களில் பல பிக்குகளும் அடங்குவர், விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன, அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

## இளம் பிக்குகளை வழிநடத்திய தலைமைப்பிக்கு கைது!



தாய்லாந்திலிருந்து கொண்டுவரப்பட்ட சட்டவிரோத போதைப்பொருட்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பெறவிருந்த, கடவத்தை ரம்முத்துகல ஶ்ரீ புண்ய லங்காராம விகாரையைச் சேர்ந்த அகுனுகொலே அமிதானந்தா என்ற சந்தேக நபரை ஏழு நாட்களுக்கு (மே 02 வரை) தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதவான் சுபானி அபேசேகர 27 ஆம் திகதி உத்தரவிட்டார். போதைப் பொருட்களைக் கொண்டு வந்த இளம் துறவிகள் கைது செய்யப்பட்டபோது, பிக்கு அமிதானந்தா போதைப் பொருட்களை பெறுவதற்காக விமான நிலையத்தில் காத்திருந்தார் என்று கொழும்பு பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் உதவி ஆய்வாளர் ராஜபக்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார். துறவிகள் கைது செய்யப்பட்ட பின்னர், கலவரமடைந்த பிக்கு அமிதானந்தா, விமான நிலையத்திலிருந்து தப்பி மிரிஸ்வத்தை பகுதியில் பதுங்கினார். பல புலனாய்வுக் குழுக்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு அவரைக் கைது செய்தன. விசாரணையின் போது சந்தேக நபர் இதற்கு முன்பும் நாட்டிற்கு போதைப் பொருட்களைக் கடத்தியுள்ளார் என்பது தெரியவந்தது.

பிக்கு அமிதானந்தாவின் மருத்துவப் பதிவுகள் சாதகமாக இருப்பதாகவும், அவர் அந்த நேரத்திலும் போதைப் பொருள் பயன்படுத்தி வந்ததாகவும் அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். மேலதிக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

தாய்லாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விட்டு கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி நாடு திரும்பிய போது கைது செய்யப்பட்ட 22 தேரர்களில், 19 பேர் போதைப்பொருள் பயன்படுத்தியுள்ளமை சட்ட வைத்திய அதிகாரியின் சோதனையில் தெரிய வந்துள்ளது.

தாய்லாந்து பயணத்திற்காக இளம் துறவிகளைச் சேர்க்கப் பயன்படுத்தப்பட்ட வாட்ஸ்அப் குழுவை துறவி அமிதானந்தாவே நடத்தி வந்தது தெரிய வந்துள்ளது. மேலும், பிரிவு 54 -இன் கீழ் ஒரு வார கால விசாரணைக்காக அவரைத் தடுத்து வைக்க அனுமதி கோரப்பட்டது.









## மகாநாயக்கர்கள் கண்டனம்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 22 பௌத்த துறவிகள் கைது செய்யப்பட்டமை மற்றும் அதனுடன் தொடர்புடைய பாரிய போதைப் பொருள் கடத்தல் விவகாரம் குறித்து, இலங்கையின் மகாநாயக்க தேரர்கள் கூட்டறிக்கை ஒன்றின் ஊடாகத் தமது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

விமான நிலையத்தில் நடத்தப்பட்ட விசேட சோதனையின் போது, சுமார் 1.1 பில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய போதைப்பொருட்களுடன் 22 பௌத்த துறவிகள் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். இந்த அதிர்ச்சித் தரத் தக்கச் சம்பவத்தைத் தொடர்ந்தே மகாநாயக்க தேரர்களின் இந்த அவசர அறிக்கை வெளியாகியுள்ளது. துறவிக் கோலத்தில் இருந்து கொண்டு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதானது பௌத்த சாசனத்திற்கு எதிரானது மற்றும் முற்றிலும் சட்டவிரோதமானது என மகாநாயக்க தேரர்கள் கடுமையாகச் சுட்டிகாட்டியுள்ளனர்.

துறவிகள் என்ற போர்வையில் சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் குறித்து முறையான விசாரணைகளை நடத்தி, அவர்களை பௌத்த ஒழுங்கிலிருந்து நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

இளம் துறவிகளை இவ்வாறான சட்ட விரோத செயல்களுக்குத் தூண்டுபவர்கள் மற்றும் அவர்களை இதற்காகப் பயன்படுத்துபவர்கள் குறித்து பாதுகாப்புப் பிரிவினர் உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த விவகாரத்துடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கும் எதிராக பாரபட்சமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

## ஜனாதிபதி மகாசங்கத்தினருடன் சந்திப்பு

கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைப்பொருட்களுடன் பிக்குகள் சிலர் கைது செய்யப்பட்டமை மற்றும் அது தொடர்பான விசாரணைகள், அதனால் எழுந்துள்ள நிலைமைகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் பங்கேற்புடன் மூன்று பீடங்களின் மகா சங்கத்தினரின் தலைமையில் 28 ஏப்ரல் 2026 செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

தற்போது போதைப்பொருள் அச்சுறுத்தல் ஒரு தேசிய பேரழிவாக மாறியுள்ளதை இந்தச் சம்பவம் உறுதிப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, போதைப்பொருளுக்கு எதிராக அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்துடன் அனைவரும் வலுவாக கை கோர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நாட்டைப் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக புதிய மாற்றத்தை நோக்கி இட்டுச் செல்லும் பயணத்தில், பௌத்த சாசனத்தையும் அதனுடன் கட்டியெழுப் பப்பட்டுள்ள விழுமியங்களையும் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# அரசியலமைப்பில் உள்ள 13ஐ நடைமுறைப்படுத்தக் கோருவதில் என்ன பிழை? கஜனுக்கு சுரேஷ் பதில் கேள்வி

மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடாத்துமாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தொடர்ந்து பிரசாரம் செய்து வருவதாக கஜேந்திரகுமார் முன் வைத்திருக்கும் குற்றச்சாட்டு தொடர்பில் கடும் விசனம் வெளியிட்டுள்ள அக்கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன், 'நிச்சயமாகக் கொண்டு வரப்படும் எனும் உத்தரவாதம் இல்லாத புதிய அரசியலமைப்பில் உள்வாங்கப்பட வேண்டிய தமிழர்களுக்கான அரசியல் தீர்வு பற்றிப் பேசுகிறோம். அவ்வாறிருக்கையில் ஏற்கனவே அரசியலமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்துமாறு கோருவதில் என்ன பிழை இருக்கிறது?' எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.



இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் அரசியலமைப்பு உருவாக்கம் ஆகிய விவகாரங்களில் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளை ஒருமித்த நிலைப்பாட்டுக்குக் கொண்டுவரும் நோக்கில் தமிழ் சட்டத்தரணிகள் பேரவையினால் கடந்த மார்ச் 2ஆம் திகதி மற்றும் இம்மாதம் 9ஆம் திகதிகளில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண்டு சந்திப்புக்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்ததுடன், அவர்களில் இடையில் பொது இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டன.

இருப்பினும் தமிழ்த்தேசியப் பேரவையினால் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தின் பிரகாரம் இனப்பிரச்சினைக்கான தீர்வாக தமிழர் தரப்பின் நிலைப்பாட்டினைக் கூட்டாக முன்வைப்பதற்கான தீர்வுத் திட்ட வரைவைத் தயாரிப்பதற்கும், அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் அரசியல் தலைவர்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் உள்ளிட்ட 28 பேரடங்கிய ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணயப் பொதுச்சபை வழிநடத்தல் குழுவை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு ஈழத் தமிழர் அரசியலமைப்பு நிர்ணயப் பொதுச்சபையின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி தி.விக்னேஸ்வரனால் கடந்த 17ஆம் திகதி அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

அதுமாத்திரமன்றி தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சந்திப்புக்களின் போது சமஷ்டி அடிப்படையிலான தீர்வு குறித்துப் பேசுவதென இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுரேஷ் பிரேமசந்திரன் உள்ளிட்ட தரப்பினர் மாகாணசபைத் தேர்தல் விரைவாக நடாத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வடக்கில் தொடர்ந்து பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாகவும் குற்றஞ் சாட்டினார்.

இக்குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமளித்த சுரேஷ் பிரேமசந்திரன், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பல்வேறு ஆவணங்கள் இருப்பதாகவும், எனவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது அதில் உள்வாங்கப்பட வேண்டிய தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்னவென்பது பற்றிய ஆவணத்தைத் தயாரிப்பது அத்தனை கடினமான காரியமல்ல என்றும் சுட்டிக் காட்டினார். தமிழ் சட்டத்தரணிகள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலாவது கூட்டத்தின் போது அதனைச் செய்து முடிப்பதற்குத் தயாராக இருப்பதாகவே கஜேந்திரகுமார் இணங்கினார். அதன் பின்னர் அண்மையில் நடைபெற்ற இரண்டாவது கூட்டத்திலும் அவரது கட்சியின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

அவ்வாறிருக்கையில் தற்போது அரசியல் தீர்வு குறித்து அவர்கள் பிறிதொரு குழுவாகத் தனித்துச் செயற்படுவதாக இருந்தால், தமிழ் சட்டத்தரணிகள் பேரவையின் கூட்டு முயற்சியில் தொடர்ந்து இணைந்திருப்பதா, இல்லையா என்று அவர்கள் தான் தீர்மானிக்கவேண்டும்' எனவும் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

அதேபோன்று, 13ஆவது திருத்தம் என்பது ஏற்கனவே அரசியலமைப்பில் இருக்கின்ற விடயமாகும். நாம் புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்படக்கூடும் என்ற எண்ணக்கருவின் அடிப்படையிலேயே தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கின்றோம்.

ஆனால் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்பதற்கான உத்தரவாதம் எதுவுமில்லை. எனவே இது வரை பேசப்படாத ஒரு புதிய அரசியலமைப்பில் நாம் தமிழர்களுக்கான தீர்வை முன்மொழிவது குறித்து ஆராய்கிறோம். இன்னமும் கொண்டு வரப்படாத ஒன்றைப் பற்றிப் பேசும் போது, ஏற்கனவே அரசியலமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்துமாறு கோருவதில் என்ன பிழை இருக்கிறது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# கனடா 'தமிழர் தகவல்' சஞ்சிகை 35வது ஆண்டு விருது விழாவும் மலர் வெளியீடும்

1991ம் ஆண்டிலிருந்து கனடாவில் மாதாந்தம் அறாத்தொடராக வெளிவந்துகொண்டிருக்கும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் 35வது ஆண்டு விருது விழாவும் 'இளமுதிர்ச் சுவடு' மலர் வெளியீடும் ரொறன்ரோ நகர சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. மலர் வெளியீடு நிகழ்வுக்கு தகவலின் உதவி ஆசிரியர் அனோஜினி குமரதாசனும் விருது-கள் வழங்கும் நிகழ்வுக்கு நகர சபை உறுப்பினர் நீதன் சண்ணும் தலைமை தாங்கினர். பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன் முதன்மை உரை ஆற்றினார். ரொறன்ரோ நகர மேயர் ஒலிவியா சௌ பிரதம விருந்தினராக பங்கேற்று விருதுகளை வழங்கி மாண்பேற்றினார். விழாவில் வழங்கப்பட்ட எட்டு விருதுகளின் விபரம் வருமாறு: வாழ்நாள் சாத - னையாளர் விருது - மருத்துவ பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை (உலக சத்திரசிகிச்சை நிபுணர்கள் சங்க தலைவர்). தமிழர்களின் மனித உரிமைகளுக்கான தார்மிக தற்சாட்சிய சிறப்பு விருது - திரு. றோய் இரத்தினவேல். தொடர் சமூகப் பணிக்கான உயர் விருது - திரு. ஆர். ஆர். ராஜ்குமார். கலைப்பாரம்பரிய அடையாள (நடனம்) விருது - திருமதி குமுதினி சிறீகாந்தன். தொழில்வாண்மை விருது - 'மை மெக்கானிக்' நிறுவனம். எழுத்துப் பணிக்கான விருது - திருமதி பவானி தர்மகுலசிங்கம். பன்முக ஆற்றல் சாதனை மாணவர் விருது - செல்வன் அக்ஷே ஜெயபாலசிங்கம். இளம் பாடகர் சாதனை விருது - செல்வன் சபேசன் சுகிர்தராஜா. ஆண்டு மலரின் முதற்பிரதியை வெளியீட்டு முகாமையாளர் சசிகரன் பத்மநாதன் கையளித்து வெளியிட்டு வைத்தார். சர்வதேச ஊடகப் பரப்பில் அறுபது ஆண்டுகளை பூர்த்திசெய்த திரு எஸ். திருச்செல்வம் தமிழர் தகவலின் முதன்மை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். விழாவின் சில ஒளிப்படங்கள் இங்கு.
























# மாகாணசபைத் தேர்தலுக்கு ஒன்றிணைந்து அழுத்தம்? பீரிசுடனான தமிழ்கட்சிகள் சந்திப்பில் இணக்கம்!



மாகாணசபைத் தேர்தல்களை உடனடியாக நடாத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கும் நடவடிக்கைகளை வடக்கு மற்றும் தெற்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து முன்னெடுப்பது குறித்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸூக்கும் தமிழ்த்தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் 49 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு 26 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தந்தை செல்வா நினைவுப் பேருரை நிகழ்வில் உரையாற்றுவதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற் கொண்டிருந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸூக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சனிக்கிழமை (25) மாலை 4.00 மணியளவில் சுமந்திரனின் யாழ் இல்லத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது தாம் ஆட்சிபீடமேறி ஒரு வருட காலத்துக்குள் மாகாணசபைத் தேர்தல்களை நடாத்துவதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதி அளித்த போதிலும், அவ்வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியிருப்பது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக 13 ஆவது திருத்தத்தின் ஊடாக அரசியலமைப்பில் உள்வாங்கப் பட்டுள்ள மாகாணசபைகள் முறைமையை இயங்கச் செய்ய வேண்டியது அவசியம் என இங்கு வலியுறுத்தப் பட்டதுடன் மாகாணசபைத் தேர்தல்களை விரைவாக நடாத்துமாறு அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகிப்பதை முன்னிறுத்தி தாம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் இரு தரப்பினரும் விளக்கமளித்தனர். அதற்கமைய மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடாத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கும் நடவடிக்கைகளை வடக்கு மற்றும் தெற்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தப் பட்டது.

மேலும் இவ்விடயத்தில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதுடன், எதிர்வருங் காலங்களில் அத் தரப்புடனும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

## நாச்சிமார் ஆலயத்தில் இருந்து ஆமி வெளியேறியது

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள புகழ் பெற்ற நாச்சிமார் ஆலய வளாகத்திலிருந்து இராணுவத்தினர் முழுமையாக வெளியேறியுள்ளனர்.

கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த ஆலயப்பகுதியிலிருந்து, இராணுவத்தினர் எவ்வித உத்தியோக பூர்வ அறிவிப்புகளுமின்றி திடீரென செவ்வாய்க்கிழமை (27) அன்று வெளியேறியுள்ளனர். இராணுவத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து, நீண்ட காலத்தின் பின்னர் அப்பகுதிக்குச் சென்ற பக்தர்கள் தற்போது ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இருப்பினும் ஆலயத்திலிருந்து வெளியேறிய இராணுவத்தினர், அங்கிருந்த அனைத்துக் கட்டடங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கி விட்டுச் சென்றுள்ளதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். 25 ஆண்டு கால ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்தாலும், ஆலய வளாகத்திலிருந்த கட்டடங்கள் இடிக்கப்பட்டமை அப் பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



Vivekananthan Sasitharan
Barrister, Solicitor & Notary Public



Rajabalini Sasitharan
Barrister, Solicitor & Notary Public

Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

Family Law
- Divorce
- Custody & Support

Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

# பொதுவெளியில் பிளவுண்டு அரங்கேறும் தமிழ்த்தேசியத்தின் தலைவிதி!



•தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்திட்டங்களை எதிர்ப்பதற்கு இன்னும் இறுக்கமான கட்டமைப்பை உருவாக்குவதற்காக தமிழரசு கட்சியுடன் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தொடர்ந்து பேசி வருகிறது.

•தமிழரசு கட்சிக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை பொதுவெளியில் பேசுவதை தவிருங்கள் என கட்சியின் பதில் தலைவர் சி.வி.சிவஞானம் வேண்டுகோள்.

•வடக்கு கிழக்கு கட்சிகளை ஒழுங்குக்குள் கொண்டு வாருங்கள் என்று தமிழரசு கட்சியிடம் இந்திய துணை ஜனாதிபதி இராதாகிருக்ஷ்ணன் கோரியுள்ளார்.

•தமிழ்த் தேசிய கட்சிகளிடையே தீர்வு காண முன்னெடுக்கப்பட்ட ஒற்றுமை முயற்சியை தமிழ்க் காங்கிரஸ் கட்சி தகர்த்துவிட்டதென தமிழரசுக் கட்சி குற்றச்சாட்டு.

•இலங்தை தமிழ் மக்களுக்கு இந்தியா எப்போதும் உறுதுணையாக இருப்பதாகவும் கரிசனையுடனும் அர்ப்பணிப்புடனும் இருப்பதாகவும் அதன் துணை ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளிடம் நேரடியாகத் தெரிவிப்பு.

மேற்குறிப்பிட்ட செய்திகளின் தலைப்புகள் கடந்த ஒரு வாரத்துக்குள் தமிழ் ஊடகங்களில் வெளிவந்தவை. இவை வெவ்வேறாக, வெவ்வேறு தினங்களில் வெளி வந்திருந்தாலும் இவை அனைத்துமே ஒன்றுடன் ஒன்று நெருக்கமான தொடர்புடையவை.

தங்களை தமிழ்த் தேசிய கட்சிகள் என்று பெருமையுடன் குறிப்பிட்டுச் சொல்லும் தமிழரசு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியவை சம்பந்தப்பட்டதாக சொல்லப்பட்ட விடயங்கள் இவை. தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை தலைமையாகக் கொண்டது. புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய மூன்று முன்னாள் ஆயுதக் குழுக்களும் இணைந்த அரசியல் அமைப்பு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி. இப்போது மேலும் இரண்டு அமைப்புகள் கூட்டணியோடு சேர்ந்து இயங்குகின்றன.

ஆக, தமிழரசு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற மூன்றும் எவ்வாறு ஒற்றுமையாக தேசிய நலன் சார்ந்து இயங்குகின்றன என்பதை இப்பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட செய்தித் தலைப்புகள் ஊடாக புரிந்து கொள்ள முடியும்.

அண்மைக் காலத்தில் தமிழரசுக் கட்சியுடன் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மிக நெருக்கமாக பல பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது. மாகாண சபை தேர்தல் நடைபெறுமென்ற எதிர்பார்ப்பில் இவர்களுக்கிடையே ஓர் இணைப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது. இணைப்பு ஏற்பட்டது போல இரு தரப்பிலிருந்தும் அவ்வப்போது அறிவிப்புகளும் வெளிவந்தன.

ஆனால், இப்போது கூட்டணி விடுத்திருக்கும் அறிவிப்பை பார்க்கும் போது அவ்வாறு இணைப்பு இன்னும் ஏற்படவில்லை, அல்லது தமிழரசுக் கட்சியை இன்னும் முழுமையாக கூட்டணி நம்பவில்லையென்பது தெரிய வருகிறது. இறுக்கமான கட்டமைப்பை உருவாக்க தாங்கள் தமிழரசுடன் பேசி வருவதாக கூட்டணியினர் தெரிவித்திருப்பதை பார்க்கும்போது, ஏதாவது தேர்தல் வந்தால் தான் குருவிச்சை ஒட்டு இவர்களுக்குள் வரும் போலத் தெரிகிறது. கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சி தங்களைத் தூக்கியெறிந்ததை கூட்டணியினர் இன்னும் மறக்கவில்லை போலும். தமிழரசுக் கட்சி பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவர்களுக்கும் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரனுக்குமிடையில் நீண்டகாலமாக நிலவி வரும் அரசியல் பகைமையும் இதற்கொரு காரணமாக இருக்கலாமென நம்பப்படுகிறது.

தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் வேறுபாடுகளை பொதுவெளியில் பேசுவதைத் தவிர்க்குமாறு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் விடுத்திருக்கும் வேண்டுகோள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. உட்கட்சி விவகாரங்களை ஊடகங்கள் ஊடாக கசிய விட்டு, பொதுவெளியில் அதனை சர்ச்சையாக்கி வருபவர் யார் என்பது சி.வி.கே.சிவஞானம் அவர்களுக்குத் தெரியும். கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரனே அந்த நபர். நேரடியாக தனது கருத்தை அவரிடம் தெரிவிக்காது பொதுவெளியில் இதனைக் கொண்டு வந்து கட்சியின் உட்பிளவை பதில் தலைவரே மேலும் பகிரங்கமாக்கியுள்ளார்.

தமிழரசுக் கட்சிக்குள் இன்று ஏற்பட்டிருக்கும் பிளவு நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரும்கூட தீர்க்க முடியாத ஒன்றாக நீட்சி பெற்றுள்ளது. கட்சி பல்வேறு காரணிகளால் துண்டு துண்டாகியிருக்கிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டுமானால் உயர் மட்ட பதவிகளில் மக்கள் கருத்துக்கும் விருப்புக்கும் ஏற்றவாறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இது சி.வி.கே. அவர்களுக்குத் தெரியாததல்ல. பொதுவெளியில் அறிக்கை விடுவதன் மூலம் பொதுவெளியில் பேசுவதை தடுக்க முடியாதென்பதை கட்சியின் இரு கூறுகளும் நன்கு தெரிந்துள்ளன.

இவ்வாறு அத்திவாரத்தில் ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியிடம், வடக்கு கிழக்கு கட்சிகளை ஒழுங்குக்குள் கொண்டு வாருங்கள் என்று இந்திய துணை ஜனாதிபதி இராதாகிருக்ஷ்ணன் வேண்டியிருக்கிறார் என்ற செய்தியை படிக்கும் போது நகைச்சுவையாகத் தெரிகிறது. தான் போக வழி தெரியாத மூஞ்சூறிடம் விளக்குமாறையும் இழுக்குமாறு கேட்கப்பட்டது போன்றது இந்த வேண்டுகோள். பாவம் இந்திய துணை ஜனாதிபதி. செய்ய முடியாத ஒரு பொறுப்பை எதற்காகத்தான் தமிழரசுக் கட்சியிடம் ஒப்படைத்தாரோ தெரியாது.

தமிழ்த் தேசிய கட்சிகளிடையே தீர்வு காண முன்னெடுக்கப்பட்ட ஒற்றுமை முயற்சியை தமிழ்க் காங்கிரஸ் கட்சி தகர்த்துவிட்டதென தமிழரசுக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது என்பது அடுத்த செய்தித் தலைப்பு. தமிழரசுக் கட்சியின் இந்த அறிக்கையில் அதன் பதில் தலைவர் சிவஞானமும் பதில் செயலாளர் சுமந்திரனும் கூட்டாக ஒப்பமிட்டுள்ளது கவனத்துக்குரியது. தமிழரசுக்கும் தமிழ் காங்கிரசுக்குமிடையில் பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் போன்ற ஒவ்வாமை இன்று நேற்று உருவானதல்ல. அதன் வெளிப்பாடு இப்போதும் உலாவி வருகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழரசின் பதில் தலைவர் சிவஞானத்தை நாடிச் சென்று இரு தரப்பையும் ஓர் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வர முயற்சி எடுத்தது ஞாபகம் இருக்கிறது. ஆனால், அப்போது தமிழரசுக் கட்சி கஜேந்திரகுமாரின் வேண்டுகோளை தூக்கி எறிந்தது. அதற்கு தங்களுக்கு பொருத்தமான காரணத்தையும் தமிழரசுக் கட்சி தெரிவித்திருந்தது.

இருப்பினும், பொதுவெளியில் பொதுவானவர்கள் சந்திப்பில் முக்கியமாக வெளிநாட்டு ராஜதந்திரிகள், இந்திய அரசின் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தைகளில் தமிழ்க் காங்கிரசும் அதன் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் மற்றைய தமிழ்த் தேசிய கட்சிகளோடு இணைந்து பங்கேற்று வருகிறது. எனினும், அது தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து ஒருபோதுமே விலகியதில்லை.

தற்போது தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை அனைத்துத் தமிழ் தேசிய கட்சிகளையும் இணைத்து மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணிகள் பங்குபற்றியே வருகின்றன. இவ்வேளையிலும் கூட தங்களது தனிப்பட்ட நிலைப்பாட்டிலிருந்து அவர்கள் விலக விரும்பாததே அவர்களின் போக்கு.

இதனையே சுட்டிக்காட்டும் தமிழரசுக் கட்சி தங்களுக்கிடையே நீண்டகாலமாக இருக்கும் அரசியல் கசப்புணர்வை உட்புகுத்தி தமிழ்த் தேசிய கட்சிகளிடையே ஏற்பட்டு வரும் ஒற்றுமையை தமிழ்க் காங்கிரஸ் சிதறடித்து விட்டதாக குற்றஞ்சாட்டியுள்ளது. இதற்கு காலமே நின்று பதில் சொல்லும் கடப்பாடுடையது.

இலங்கைக்கு குறுகிய விஜயம் மேற்கொண்ட இந்திய துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருக்ஷ்ணன் பல தரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசினார். தமிழ்த் தேசிய தரப்பில் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய மூன்றையும் ஒன்றாகவே சந்தித்தார். இலங்கை தமிழ் மக்களுக்கு இந்தியா எப்போதும் உறுதுணையாக இருப்பதாகவும், கரிசனையுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுவதாகவும் இவர் தெரிவித்தார்.

இது ஒன்றும் புதியவை அல்ல. பழைய பல்லவிதான். இந்தியாவின் உண்மையான கரிசனையும் அக்கறையும் தமிழ் மக்கள் மீது இருப்பின் இரு நாடுகளின் ஒப்பந்தம், 13ம் திருத்தம், மாகாண சபை தேர்தல் என்பவை கேட்பாரில்லாத அநாதையாகி இருக்க முடியாது. இப்போது எதுவுமே இல்லை என்ற நிலையில் வெற்று வார்த்தைகளால் எதையும் சொல்லி விடுவதில் அர்த்தமில்லை.

மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்துமாறு இலங்கை அரச உயர் மட்டத்திடம் தாம் எடுத்துக் கூறியிருப்பதாகவும் துணை ஜனாதிபதி இராதாகிருக்ஷ்ணன் தமிழர் தரப்பிடம் கூறியுள்ளார். அவ்வாறு அவர் கூறியிருப்பதற்கு நன்றி சொல்ல வேண்டும். ஆனால், அது எந்தளவுக்கு உள்வாங்கப்படும் என்பது தான் கேள்வி.

இலங்கையில் பொதுமக்கள் வாக்குகளால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவது போன்ற நடைமுறை இந்தியாவில் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாநில மக்களவை உறுப்பினர்களும் சேர்ந்தே ஜனாதிபதியையும், துணை ஜனாதிபதியையும் இந்தியாவில் தெரிவு செய்வர். அதாவது ஆட்சியிலிருக்கும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கே இப்பதவி கிடைக்கும். சொல்லப்போனால் நிறைவேற்று அதிகாரமில்லாத ஓர் அலங்காரப் பதவி என்றே இதனைச் சொல்ல வேண்டும். இதனைப் புரிந்து கொண்டால் துணை ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இலங்கை அரசு எவ்வாறு செவிசாய்க்கும் என்பதை அறிந்து கொள்ள நேரம் எடுக்காது.

கடந்த ஒரு வாரத்தில் தமிழ்த் தேசிய பரப்பில் என்ன நடைபெறுகிறது என்பதை ஊடகங்கள் வாயிலாக தெரிந்து கொள்ள முடிந்தது. தமிழரசுக் கட்சி உள்ளக மோதலால் பொதுவெளியில் மிக மோசமாக பிளவுபட்டுள்ளது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி எப்போதும் போல் தனிவழியிலேயே பயணிக்கிறது. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி இன்னமும் பூரணமாக தமிழரசுக் கட்சியை நம்பாது தொடர்ந்து பேசிக் காலத்தை கழிக்கிறது. சகல தமிழ்த் தேசிய கட்சிகளும் தமிழர் நலன் சார்ந்து இன்னமும் இயங்க ஆரம்பிக்கவில்லை என்றே தோன்றுகிறது. அதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் தெரியவில்லை.

கட்டுரையாளர்:-
**பனங்காட்டான்**

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


25 ஏப்ரல் 2026 முதல் 01 மே 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகரெத்தினம் முருகேசு

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 25 ஏப்ரல் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மனோண்மணி பாலசுந்தரம்

கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய முன்னாள் ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 29 ஏப்ரல் 2026 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நமசிவாயம் திருநாவுக்கரசு

புங்குடுதீவு இறுப்பிட்டி 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நமசிவாயம் தனபாலசிங்கம் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவு நாள் 23 ஏப்ரல் 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நமசிவாயம் திருநாவுக்கரசு அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகளோடு...



### திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது நினைவழியா நினைவுகளோடு அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 28 ஏப்ரல் 2026 செவ்வாய்க்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் சின்னையா

புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சின்னையா அவர்களின் 35வது ஆண்டு நினைவாக 30 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை சித்திரா பௌர்ணமி உபயமாக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பாக்கியம் சின்னையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் இரத்தினவடிவேல்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தம்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 19 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




19 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்.புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களது 27வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




20 ஏப்ரல் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு பகீரதன் ஸ்ரீகரன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




23 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நமசிவாயம் திருநாவுக்கரசு அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




25 ஏப்ரல் 2026 சனிக்கிழமை வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நாகரெத்தினம் அவர்களது 5வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




26 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வாழும் திரு சிவசுப்பிரமணியம் நாகலிங்கம் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




28 ஏப்ரல் 2026 செவ்வாய்க்கிழமை யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளீர் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




29 ஏப்ரல் 2026 புதன்கிழமை கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




30 ஏப்ரல் 2026 புதன்கிழமை சித்திராபௌர்மணி விரத உபயமாக ஊரெழுவைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியவதி நல்லையா அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 ஏப்ரல் 2026 புதன்கிழமை புலோலி தெற்கு புலோலியைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் சின்னையா அவர்களது 35வது ஆண்டு நினைவாக அன்னாரது குடும்பத்தினர் சித்திராபௌர்ணமி விரத உபயமாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




01 மே 2026 வெள்ளிக்கிழமை சித்திராபௌர்ணமி விரத உபயமாக யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளிர் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




01 மே 2026 வெள்ளிக்கிழமை சித்திராபௌர்ணமி விரத உபயமாக அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இராஜேஸ்வரி செல்வராஜா அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினாரகள்



# தீர்வு குறித்து பேசுதல் என்றால் என்ன?

அரசியலில் பேசுதல் என்றால் என்ன? முதல் பார்வையில் இதென்ன கேள்வி. அரசியலை அரிவரியில் இருந்து ஆரம்பிப்பது போன்றல்லவா இருக்கின்றது முதல் பார்வையில் நீங்கள் இப்படித் தான் எண்ணிக் கொள்வீர்கள். ஆனால் ஈழத் தமிழர் அரசியல் தொடர்ந்தும் அர வரியில் தானே இருக்கின்றது. நமது நிலைமை

அரிவரி என்றால் அரவரியில் இருந்து தானே பாடத்தை ஆரம்பிக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியராக அறியப்பட்ட அன்ரன் பாலசிங்கம் கூறியதாக ஒரு முறை புதுவை இரத்தினதுரை கூறியது நினைவில் உண்டு. அதாவது, இராஜதந்திரம் என்பது மீண்டும் தொடங்கிய இடத்திற்கே செல்வதல்ல என்று பாலா கூறுவாராம்.

அரசியலில் பலத்தோடு இருக்கும் போது இந்தக் கூற்று சரியானதுதான் ஆனால் பலமற்ற நிலையில் எல்லாம் தலைகீழாகி விடும். பலமற்ற நிலையில் தொடங்கிய இடத்திற்கு எந்த வொரு பெறுமதியும் இருக்கப் போவதில்லை மாறாக, தற்போது எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதே முக்கியமானது.


ராஜதந்திரம் பற்றி ஒரு கவர்சியான கூற்றுண்டு அதாவது. கல்லு கிடைக்கும் வரையில் நாயோடு பேச்சுவார்த்தை நடத்துவது தான் இராஜதந்திரம். இங்கு கல்லு என்பது பலத்தை குறிக்கும். எனவே அரசியலில் ஆளும் தரப்போடு பேசுதல் என்பது அடிப்படையில் பலத்தோடு தொடர்பானது மட்டும் தான். பலமில்லையேல் அரசியலில் பேசுதல் என்பதற்கு எவ்வித அர்த்தமும் இல்லை - அப்படியான சூழலில், நாம் வெறும் வார்த்தை ஜாலங்களிலேயே திருப்திப்பட்டுக் கொள்வோம். இப்போது நமது தமிழர் அரசியல் இருப்பது போன்று.

இப்போதும் தமிழ் மக்களுக்கான அரசியல் கோரிக்கைகளை எவ்வாறு முன்வைக்கலாம் என்று, சட்டத்தரணிகள் சிலர் கூடி ஆராயவுள்ளதாகவும், ஒரு தீர்வாலோசனையை முன் வைக்கப் போவதாகவும் செய்திகளை காண முடிகின்றது. தமிழ் மக்களுக்கு என்ன வேண்டும் என்னும் கோரிக்கையை முன் வைக்கலாம் - அது நல்லது தான். ஆனால் இங்கு ஒரு அடிப்படையான கேள்வியுண்டு. அந்தக் கோரிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளா விட்டால், அவர்களை இறங்கி வரச் செய்வதற்கு தமிழரிடம் உள்ள பலம் என்ன? சில நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்திருப்பதால் மட்டும் அரசியலில் பேசிவிட முடியுமா? அவ்வாறாயின் கடந்த 77 ஆண்டுகளில் ஏராளமான விடயங்களை அல்லவா தமிழர் அரசியலில் ரீதியில் சாதித்திருக்க வேண்டும்.

ஈழத் தமிழர் அரசியலானது. அதன் வரலாற்று காலம் முழுவதும் கோரிக்கைகளால் நிரம்பியது தான். கோரிக்கைகளுக்கு எப்போதுமே நம்மத்தியில் பஞ்சம் இருந்ததில்லை. இவ்வாறான கோரிக்கைகளை முன் வைப்பதில் காலத்திற்கு காலம் பலர் ஈடுபட்டிருக்கின்றனர். இந்த அடிப்படையில் நோக்கினால், நம்மத்தியில் விக்கிரமாதித்தியன்கள் காலத்திற்கு காலம். கதைகள் சொல்வதாகவும், அதில் சற்றும் திருப்தியுறாத வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொள்வதாகவுமே நமது காலம் கழிந்திருக்கின்றது.

செல்வநாயகம் பண்டாரநாயக்காவோடு பேசிய நாளிலிருந்து, நாங்களும் தொடர்ந்தும் அவ்வப்போது தென்னிலங்கை ஆட்சியாளர்களோடு பேசித் தானே வந்திருக்கின்றோம் ஆரம்பத்தில் கொஞ்சம் முன்னேற்றம் தெரிவது போல் தெரிவதும், பின்னர் மீண்டும் பழைய குறுடி கதவைத் திறடி என்பது போல் அனைத்தும் புஸ்வானமாகிவிடுவதும் தானே இது வரையான கதை.

இந்தக் கதை இனியும் தொடரும் என்பதில் இந்தக் கட்டுரையாளரிடம் எவ்வித சந்தேகமும் இல்லை. ஏனெனில் கோரிக்கைகளை முன் வைத்தில் நீயா, நானா என்று முட்டுப்பட்டுக் கொள்ளும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சியாளர்கள் எவருமே. தங்களிடன் என்ன பலம் உள்ளது என்பது பற்றி சித்தித்துப் பார்ப்பதில்லை. அவ்வாறு



சிந்தித்துப் பார்க்க முற்பட்டிருந்தால், பயனற்ற கட்சிச் சண்டைகளில் காலத்தை விரயம் செய்திருக்க மாட்டார்கள்.

சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடைய முடியுமா என்னும் கேள்வியின் அடிப்படையில் முன்னைய கட்டுரைகளில் வாதிட்டிருந்தேன். இலங்கைத் தீவில் அதற்கான சாத்தியப்பாடு முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போன்றதாக அமையும் என்பதே எனது திடமான வாதம். அது ஏன் என்பதற்கான அடிப்படையான காரணம் பற்றித்தான் இந்தக் கட்டுரை ஆராய்கின்றது. பேரம் பேசுவதற்கான பலமின்மையே அடிப்படையான காரணமாகும்.



அதாவது கொடுப்பதற்கு எதுவுமில்லை என்றால் பெறுவதைப் பற்றி யோசித்துப் பயனில்லை. பெறுவது பற்றி யோசிக்கும் போது கொடுப்பதற்கான பலத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது பற்றியே சிந்திக்க வேண்டும். அது முடியாது என்பதை உணர்ந்தால் இப்போது இருப்பதை உச்சபட்டசமாக பயன்படுத்திக் கொள்ளுவது பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டும். அதற்காக ஒன்றிக்காக முயற்சிக் கூடாதா என்று கேட்டால் முயற்சிப்பதில் எவ்வித தவறும் இல்லை ஆனால் அந்த முயற்சி பற்றி சிந்திக்கும் போது, நமது நிலை என்ன என்பதை அறிந்து கொள்ளாமல் அவ்வாறான முயற்சிகளை மேற்கொள்வது பற்றிச் சிந்திப்பது தான் தவறானது.

தமிழர் தரப்புக்கள் தென்னிலங்கையோடு மேற்கொண்ட அனைத்து பேச்சுவார்த்தைகளுமே தோல்வியில் தான் முடிந்திருக்கின்றது. இதற்கான காரணங்களை ஆராயாமல் தொடர்ந்தும் கோரிக்கைகளை முன்வைக்கப் போகின்றோம் என்னும் அடிப்படையில் விவாதங்களை மேற் கொள்வதில் என்ன பயன் இருக்க முடியும்? ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் இரண்டு சந்தர்ப்பங்களில் தான் தென்னிலங்கை கீழிறங்கி வந்திருக்கின்றது. ஒன்று, இந்திய-இலங்கை ஒப்பந்த காலம், அடுத்தது, நோர்வேயின் தலையீட்டுக் காலம். முதலாவது காலத்தில் தமிழர்களின் பலமாக தமிழ் இயங்கங்களும், தமிழ் மக்கள் மீது பரிவு கொண்ட இந்தியாவும் இருந்தது. இரண்டாவ காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் இருந்தது.

அரசியல்ரீதியான வெற்றிக் கண்ணோட்டத்தில் பார்த்தால், இதில் இந்திய-இலங்கை ஒப்பந்த காலம் மட்டும் தான் ஒரு அரசியல் அடைவை சாத்தியப்படுத்திய கலாமாக இருக்கின்றது. இதற்கு இந்தியாவின் பிரத்தியேக தலையீடே பிரதான காரணம். அன்றிருந்த உலக அரசியல் சூழலில் இந்தியாவின் பிராந்திய நலன்களோடு.

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ஈழத் தமிழர் அரசியல் பொருந்திப் போனமையே அதற்கான காரணமாகும். அதற்கு பின்னர் அவ்வாறான தொரு வாய்ப்பு ஈழத் தமிழருக்கு கிடைக்கவேயில்லை. இனி கிடைக்கும் என்பதற்கான சாத்தியப்பாடுகளில் இந்தக் கட்டுரையாளருக்கு நம்பிக்கையும் இல்லை. ஒரு வேளை அவ்வாறான வாய்ப்பு கிடைத்தாலும் கூட அதனை கையாளுவதற்கான புத்திபூர்வமான அரசியல் தலைமையும் தமிழ் மக்களிடத்தில் இல்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் நன்மைகளை முழுமையாக அனுபவிக்க முடியாமல் போனதற்கான காரணங்களும் தமிழர் பக்கத்தில் தான் இருக்கின்றது. ஆரம்பத்தில் அனைத்தும் தமிழருக்கு சாதகமாகவே இருந்தது எனினும் தவறான அரசியல் புரிதல்களால் தேவையற்ற நெருக்கடிகள் உருவாகியது. பின்னர் நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாதளவிற்கு சிக்கலடைந்தது.

அதன் பின்னரான காலம் என்பது முற்றிலும் விடுதலைப் புலிகளின் தியாகங்களினதும் அர்ப்பணிப்புக்களினதும் காலம் தான். இந்தக் கால கட்டத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிகள் அவர்களுக்கான அரசியல் அங்கீகாரத்தை வழங்கியது. முற்றிலும் புலிகளுடைய பலத்தின் அடிப்படையிலேயே ஒஸ்லோ பேச்சுவார்த்தை இடம் பெற்றது. பேச்சுவார்த்தையின் போது, ஆயுதக் களைவு என்னும் பேச்சிற்கே இடமில்லை ஏனெனில் அது எங்களுடைய மக்களின் அதிகாரமாகும் என்று பாலசிங்கம் அழுத்தமாக குறிப்பிட்டிருந்தார். ஏனெனில் புலிகளின் ஆயுத பலம் தான் அவர்களுடைய பேரம் பேசும் பலம்.

2009இற்கு பின்னரான காலப்பகுதியில் ஈழத் தமிழரின் அரசியல் பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்பானது. பாம்பு சீறலாம் ஆனால் பாம்பை கண்டு தென்னிலங்கை அஞ்ச வேண்டியதில்லை ஏனெனில் பாம்பிற்கு பல்லில்லை என்பது தென்னிலங்கை அறியும் ஏனெனில் அந்தப் பல்லை பிடுங்கியதே அவர்கள் தானே. இவ்வாறானதொரு பின்னணியில் தான் யுத்தத்திற்கு பின்னரான கடந்த பதினாறு (18ம் பக்கம் பார்க்க)

# மூலோபாய ஒத்துழைப்பின் முக்கிய பாய்ச்சல்!

இந்திய துணை ஜனாதிபதி இராதா கிருஷ்ணனின் இலங்கை பயணம், மின்னாமல் முழங்காமல் கொட்டி தீர்த்த ஒரு மழைக்கு ஒப்பானது. இந்தப் பயணம் பெரிதாக கவனிக்கப்படாத



ஒன்றாகவே இருந்தது. ஏனென்றால் இந்தியாவின் பாரதீய ஜனதா கட்சி அரசாங்கத்தில் சி.பி.இராதாகிருஷ்ணன், மிகவும் முக்கியமான ஒருவராக இருந்த வரல்லர். பாரதீய ஜனதா கட்சி அவரை அண்மையிலேயே, துணை ஜனாதிபதியாக்கியது.

இந்தியாவின் துணை ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்ட முதலாவது சந்தர்ப்பமும் இது தான்.

இதற்கு முன்னர் 1993 ஆம் ஆண்டு மே தினத்தன்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னர் இறுதிச்சடங்கில், இந்தியாவின் சார்பில் துணை ஜனாதிபதியாக இருந்த கே.ஆர்.நாராயணன் பங்கு பற்றியிருந்தார்.

முக்கால் நூற்றாண்டுகளில் இந்திய துணை ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு மேற்கொண்ட முதலாவது அதிகாரபூர்வ பயணம், முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், இது சம்பிரதாயபூர்வமான ஒன்றாக இருக்கும் என்றே கருதப்பட்டிருந்தது. ஆனால், அவர் சுமார் 39 பேர் கொண்ட உயர்மட்ட அதிகாரிகள் குழுவுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியிருந்தார்.

உடனடியாக, ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்று அவர்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து பேச்சுக்களை நடத்தியிருந்தனர். உள்ளூர் செய்திகள் இந்தப் பேச்சுக்கள் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. இந்த பேச்சுக்களின் முடிவில், இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, இந்த பயணத்தின் அடிப்படை நோக்க த்தை வெளிப்படுத்தியிருந்தார். இந்த சந்திப்பின் போது பிரதானமாக பேசப் பட்ட விடயங்களில் இரண்டு, முக்கிய மானவையாக இருந்தன.

திருகோணமலையில் உள்ள எண்ணெய்த் தாங்கிகளை மையப்படுத்தி, எரிபொருள் கேந்திரத்தை உருவாக்குவது மற்றும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே குழாய் வழி எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்வது ஆகியனவே அவையாகும். இது ஒரு நீண்டகால மூலோபாயத் திட்டம்.இதன் அடிப்படையிலேயே முக்கியமான பேச்சுக்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இந்த விவகாரம் தமிழ் ஊடகங்களின் கவனத்தைப் பெரிதாக ஈர்த்திருக்க வில்லை. ஆனால், மூலோபாய ரீதியாக இது மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

அண்மைக் காலங்களில் இந்தியா எடுத்த இரண்டு முக்கியமான நகர்வுகளில் இதுவும் ஒன்று. முதலாவது நகர்வாக, இந்தியாவின் டிரெட்ஜிங் கோர்ப்பரேசன் ஒவ் இந்தியா நிறுவனம், கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்துடன் அண்மையில் ஒரு உடன்பாட்டில் கையெழுத்திட்டது. கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தின் இலாபம் குறைந்து வந்த நிலையில், அதன் 51 வீத உரிமையை வைத்திருந்த ஜப்பானிய நிறுவனம், இந்தியாவின் பாதுகாப்புத்துறை சார் அரசு நிறுவனமான மசகோனிடம் (mazagon) அதனை விற்பனை செய்திருந்தது.

இதையடுத்து, கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கும் சூழலில் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்துடன் டிரெட்ஜிங் கோர்ப்பரேசன் ஒவ் இந்தியா நிறுவனம் செய்துள்ள உடன்பாடு முக்கியமானது. கப்பல்களை வெளியே எடுத்து பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்பாடே இது.

இலங்கையில் இந்தியா தனது மூலோபாயத் திட்டங்களை வலுப்படுத்தும் நோக்கில் மேற் கொண்டுள்ள ஒரு நடவடிக்கையே இதுவாகும். அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா நீண்டகால குத்தகைக்கு பெற்றுக் கொண்டதற்கு பின்னர், அதன் மூலம் சீனா அடையக் கூடிய மூலோபாய நலன்களை ஈடு செய்யும் வகையில், இந்தியாவும் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்க தொடங்கியிருக்கிறது.

அதன் ஒரு கட்டமாகத்தான், கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் இந்திய அரசத் துறை நிறுவனத்தினால் வாங்கப்பட்டது. இப்போது, கப்பல்களை நீருக்கு வெளியே எடுத்து, பழுது பார்ப்பது தொடர்பான உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்பட்டிருக்கிறது.

இது கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தில், இந்திய கடற்படையின் கப்பல்கள் உள்ளிட்டவற்றை பழுது பார்ப்பதற்கும் புதுப்பிப்பதற்குமான சூழலை ஏற்படுத்தும். அது தவிர துறைமுக கட்டமைப்புகளிலும் இந்தியா முதலீடுகளை அதிகரித்து வருகிறது.

மேற்கு கொள்கலன் முனையத்தை அதானி குழுமம் அபிவிருத்தி செய்து வருவதுடன், அதன்மூலமாக பெருமளவு கொள்கலன்களை கையாளவும் தொடங்கியிருக்கிறது. இந்த சூழலில், அடுத்த கட்டமாக எரிசக்தி துறையில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் முதலீட்டு மற்றும் மூலோபாய போட்டி உருவாகியிருக்கிறது.

இரண்டு நாடுகளும் ஏற்கனவே எரிபொருள் விநியோகம் மற்றும் சில்லறை விற்பனையில் ஈடுபட்டிருக்கின்றன.

இந்த நிலையில் அம்பாந்தோட்டையில் கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர் முதலீட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை நிறுவும் திட்டத்தை சீனாவின் சினோபெக் நிறுவனம் முன்வைத்திருக்கிறது. இதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியிருக்கின்ற போதும், அதனை முன்னெடுப்பதற்கான அனுமதிகள் இன்னமும் வழங்கப்படவில்லை.

இந்த திட்டத்தை இந்தியா தனது மூலோபாய நலன்களுக்கான சவாலாக பார்க்கிறது. இலங்கையின் எரிசக்தி விநியோக பாதுகாப்பு பலவீனமடைந்தால், அது முற்று முழுதாக சீனாவின் கையில் விழுந்தால், இலங்கையில் இந்தியாவின் செல்வாக்கும் பலவீனமடையும். அத்துடன் மூலோபாய ரீதியாக சீனா, இந்தியப் பெருங்கடலில் வலுவாக காலூன்றுகின்ற நிலையை உருவாக்கும். அதனை தவிர்க்க வேண்டுமானால் எரிசக்தி துறையில் சீனாவின் மேலாதிக்கம், வளர விடாமல் தடுப்பதற்கும், அதனை சார்ந்திருக்கும் நிலையை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதனால் தான், அண்மையில் எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டபோது, இலங்கைக்கு உதவுவதில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் போட்டி உருவானது. தற்போது இலங்கைக்கு தேவையான எரிபொருளை விநியோகிக்க தயார் என இந்தியா கூறுகிறது. ஆனால் இந்தியா தனது நாட்டுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்வதில் இன்னமும் சிக்கல்களை எதிர்கொள்கிறது.

சர்வதேச ரீதியாக விநியோகச் சங்கிலி பாதிக்கப்படும் போது, சமநிலை குழப்பங்கள் உருவாகின்ற போது, இலங்கைக்கு எரிபொருள் விநியோகங்களை முன்னெடுப்பது இந்தியாவுக்கு மாத்திரமல்ல, சீனாவுக்கும் கூட இலகுவானது அல்ல.


இரண்டு நாடுகளும் தமது நாடுகளில் பெற்றோலிய வளங்களை கொண்டிருந்தாலும், பெருமளவில் அவற்றை இறக்குமதி செய்து வருகின்றன.

தமது நாட்டுக்கு தேவையானதை விட மிஞ்சி இருந்தால் மாத்திரமே, இலங்கை போன்ற தங்களின் நட்பு நாடுகளுக்கு அவற்றை விநியோகிக்க முன்வரும். இவ்வாறான சூழலில், எந்த நாட்டிடம் இருந்து நிலையான எரிபொருள் விநியோகத்தை பெற்றுக் கொள்வது என்ற குழப்பம் இலங்கைக்கு இன்னமும் நீடிக்கிறது.

ஆனால், இரண்டு நாடுகளும் தாங்கள் இலங்கைக்கு நெருக்கடியான சூழலில் எரிபொருளை விநியோகிக்க தயார் என்று போட்டி போடுகின்றன.

2015 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் மோடி முதல்முறையாக இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட போது திருகோணமலையை தெற்காசியாவின் எரிபொருள் கேந்திரமாக மாற்றுவோம் என உறுதியளித்திருந்தார். ஆனால் அது

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



நடக்கவில்லை. அதற்குப் பின்னர் அவர் 2025 ஆம் ஆண்டு இலங்கைக்கு பயணம் மேற் கொண்டிருந்த போது, இந்தியா, இலங்கை மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியன இணைந்து திரு கோணமலையில் எரிசக்தி கேந்திரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்பட்டது. அந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதும், இரண்டு நாடுகளுக்கு இடையிலான குழாய்வழி எண்ணெய் விநியோகத் திட்டத்தை முன்னெடுப்பதும் தான் இந்தியாவின் இலக்குகளாக உள்ளது.

இந்தத் திட்டத்தை விரைவாக முன்னெடுப்பதற்கு இந்தியா அவசரப்படுகிறது. கொழும்பில் நடத்திய ஊடகச் சந்திப்பில் இதுபற்றி கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி. ஊவைலரூ டுழஉயட புரனைநள

இந்தத் திட்டம் குறித்து , 2023 ஆம் ஆண்டு முதல் கலந்துரையாடப்பட்டு வருகிறது. இதற்கான காலக்கெடு இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்றாலும், இது ஒரு குறிப்பிடத்தக்க ஒரு மூலோபாய முயற்சி ஆகும்.

இதுபோன்ற மூலோபாய திட்டங்களில் முன்னேற்றம் காண்பதற்கு இனிமேலும் தாமதிக்க நேரமில்லை. இந்தத் திட்டத்தை விரைவாகத் தொடங்க வேண்டிய தன் அவசியத்தை இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர். இது போன்ற ஒரு நேரத்தில் இந்த எரி சக்தி கேந்திரம் கட்டியெழுப்பப்பட்டிரு ந்தால், மிகவும் பயனுள்ளதாக இருந்தி ருக்கும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

அதாவது, இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தால் ஈரான் போரினால் எழுந்துள்ள எரிபொருள் விநியோக நெருக்கடியில், சாதகமான நிலையை எட்டியிருக்க முடியும் என்பதே அவரது கருத்தாக இருந்தது.

தற்போது ஏற்பட்டுள்ள மத்திய கிழக்கு நெருக்கடி பல நாடுகளால், முன்கணிக்கப்படாத ஒன்றாக இருந்தது. மாற்றுத்திட்டங்களோ, மாற்று வியூகங்களோ, அவர்களால் வகுக்கப்படாமல் இருந்தது. இந்தியாவும் கூட திருகோணமலை எரிசக்தி கேந்திர திட்டம் மற்றும் குழாய் வழி எண்ணெய் விநியோகத் திட்டம் போன்றவற்றில் பெரிதாக அக்கறையின்றியே இருந்தது.

ஆனால் இப்போது நெருக்கடி அதிகரித்திருக்கிறது. சீனாவின் அழுத்தங்கள் ஒரு பக்கம், ஈரான் போர் மற்றொரு பக்கம் என மூலோபாய ரீதியாக இலங்கையின் மீது தன் செல்வாக்கை இன்னும் இன்னும் வலுப்படுத்துவதற்கான அவசியத்தை இந்தியா உணர்ந்திருக்கிறது. அதன் அடிப்படையில் தான் இந்திய துணை ஜனாதிபதியின் இந்த பயணம் அமைந்திருக்கிறது. இதனால், இந்தப் பயணம், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய ஒத்துழைப்பின் முக்கிய பாய்ச்சலாக இருக்கும் என்றே தெரிகிறது.

# தமிழக சட்டசபைத் தேர்தலில் 40 வயதில் முதல் முறையாக வாக்களித்த இலங்கைத் தமிழர்!

எல்லோரும் 18 லிருந்து 20 வயதுக்குள் முதல் முறையாக வாக்களிப்பார்கள். நான் 40 வயதில் முதல் முறையாக வாக்களித்திருக்கிறேன். இது மிகவும் போராடிப் பெற்ற உரிமை என்பதால் மற்றவர்களை விட இந்தத் தேர்தலில் பங்கேற்றதில் அதிக மகிழ்ச்சி அடைந்தவன் நான்தான். அதையும் விட இனிமேல் இந்த உரிமை என் மூலமாக எனக்கும் என் மனைவிக்கும் கிடைக்குமென்பது அதை விட மகிழ்ச்சி தருவதாகவுள்ளது!.

திருச்சி கோட்டபட்டு இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் கோகுலேஸ்வரன் பிபிசியிடம் இவ்வாறு தெரிவித்தார். பெரும் சட்டப்போராட்டம் நடத்தி இவர் இந்த உரிமையைப் பெற்றுள்ளார். இவரைப் போலவே இதே முகாமில் வசிக்கும் நளினி கிருபாகரன் என்ற பெண்ணும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், நடந்து முடிந்துள்ள சட்டப்பேரவைத் தேர்தலிலும் வாக்களித்துள்ளார்.

பாஸ்போர்ட் பெறுவதற்காக மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, அதில் கிடைத்த உத்தரவின் அடிப்படையில் வாக்குரிமை பெற்றுள்ள கோகுலேஸ்வரனுக்கு, இப்போது வரை பாஸ்போர்ட் கிடைக்கவில்லை.

கடந்த ஆண்டு நவம்பரில் 8 வாரங்களுக்குள் இவருக்கு பாஸ்போர்ட் வழங்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், நீதிமன்ற தீர்ப்பை டைப் செய்யும் போது 'நோ பெண்டிங் கேஸ்' என்பதில் 'நோ' என்ற வார்த்தை விடுபட்டதால் பாஸ்போர்ட் மறுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகளுக்காக வாதாடி வரும் வழக்கறிஞர் ரோமியோ ராய், அவருக்கு விரைவில் பாஸ்போர்ட் கிடைக்குமென்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

### உயர்நீதிமன்ற உத்தரவாதம் 40 வயதில் கிடைத்தது வாக்குரிமை!

தமிழக அரசின் வெளிநாடு தமிழர்களின் நலன் மற்றும் மறுவாழ்வு ஆணையரகம் 2023ஆம் ஆண்டில் வெளியிட்ட தரவுகளின்படி, 105 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 19,300 குடும்பங்களைச் சேர்ந்த 58,357 இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களில் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களும் இருக்கின்றனர்.

இவர்களைத் தவிர்த்து இந்த முகாம்களுக்கு வெளியே 13,400 குடும்பங்களைச் சேர்ந்த 33,479 இலங்கைத் தமிழர்கள், அருகாமையிலுள்ள காவல் நிலையங்களில் பெயர்களைப் பதிவு செய்து, பொதுக்குடியிருப்புகளில் வசித்து வருகின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் நலன் மற்றும் தீர்வுகளுக்காக 2021ம் ஆண்டில் தமிழக அரசால் ஓர் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. அந்த குழு, இந்திய குடியுரிமைச் சட்டத் திருத்தம் அமலுக்கு வந்த 1987-ஆம் ஆண்டுக்கு பின்பு, பெற்றோர் இருவரும் இலங்கைத் தமிழர்களாக இருக்கும் குடும்பங்களில் 22,058 பேர் இந்தியாவில் பிறந்தவர்கள் என்று தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்தது.

கடந்த 2026 பிப்ரவரி 15 அன்று, தமிழக முதல்வர் ஸ்டாலின் பிரதமர் மோதிக்கு எழுதிய கடிதத்தில், கடந்த 1983 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் ஏற்பட்ட இனமோதல்கள் காரணமாக தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இங்கு வந்த இலங்கைத்தமிழர்கள் 89 ஆயிரம் பேர் தமிழகத்தில் வசித்து வருவதாகக் குறிப்பிட்டிருந்தார். அவர்களில் கணிசமானோர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் வசிப்பவர்கள் என்றும், 40 சதவீதம் பேர் இந்தியாவில் பிறந்தவர்கள் என்றும் அவர் அதில் தெரிவித்திருந்தார்.

இவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும், நீண்டகால விசா வழங்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை ஸ்டாலின் வலியுறுத்தியிருந்தார்.

தமிழக அரசின் இந்த கோரிக்கை, மத்திய அரசின் பரிசீலனையில் உள்ள நிலையில் முகாம்களில் உள்ள பலரும் தங்களுடைய உரிமைக்காக தனித்தனியாக சட்டரீதியாகப் போராடி உரிமைகளை பெற்று வருகின்றனர்.

திருச்சி கோட்டபட்டு இலங்கைத் தமிழர் மறுவாழ்வு மையத்தில் வசித்து வரும் கோகுலேஸ்வரன் மற்றும் நளினி ஆகியோர், நீதிமன்ற



உத்தரவின் அடிப்படையில் வாக்குரிமை பெற்று சட்டப் பேரவைத் தேர்தலில் வாக்களித்துள்ளனர். இவர்களில் நளினி கிருபாகரன், கடந்த 2024 ஆம் ஆண்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே முதல் இலங்கைத் தமிழராக வாக்களித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய குடியுரிமைச் சட்டம் 1955 பிரிவு 3 ன்படி, 1956 ஜனவரி 26 லிருந்து 1986 ஜூலை 1 வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகள் அனைவரும் இந்தியர்கள்தான் என்ற அடிப்படையில் தனக்கு பாஸ்போர்ட் வழங்க வேண்டும் என்பதை தங்களின் கோரிக்கையாக முன் வைத்து, இவர்கள் இருவரும் உயர்நீதிமன்றத்தில் இந்தியக் குடிமகன் என்ற உரிமையை உறுதி செய்து பாஸ்போர்ட் பெறுவதற்கு உத்தரவு பெற்றிருந்தனர்.

இவர்களில் கோகுலேஸ்வரன், தனக்கு பாஸ்போர்ட் வேண்டுமென்று விண்ணப்பித்த மனுவை விசாரித்த மதுரை உயர்நீதிமன்றம் கடந்த 2025 நவம்பர் 14 அன்று, இவருக்கு 8 வாரங்களுக்குள் பாஸ்போர்ட் வழங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருந்தது. அந்த உத்தரவை வைத்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித்ததில், அவருடைய பெயர் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து பிபிசி தமிழிடம் பேசிய கோகுலேஸ்வரன், என்னுடைய தாத்தா, பாட்டி சோழிங்கநல்லூரைச் சேர்ந்தவர்கள் தான். எனது தாத்தா காலத்தில் இலங்கை சென்று நுவரேலியாவில் இருந்தனர். கடந்த 1983 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதல் துவங்கிய போது இங்கே வந்துள்ளனர். நான் 1986 பிப்ரவரி 9 அன்று திருச்சி அரசு மருத்துவமனையில் தான் பிறந்தேன். இங்கேயே பிறந்தவன் என்ற அடிப்படையில் தான் எனக்கு இந்த உரிமையை உயர்நீதிமன்றம் வழங்கியது என்றார்.

அவர் பகிர்ந்த தகவலின்படி, கோகுலேஸ்வரனின் தாயார் சரோஜா தேவி, தந்தை ரங்கராஜ் ஆகியோர், கடந்த 1983ஆம் ஆண்டில் இலங்கை அரசால் வழங்கப்பட்ட அவசர கால பாஸ்போர்ட் (ரெட் பாஸ் போர்ட்) பெற்று திருவனந்தபுரம் வழியாக தமிழகத்தில் திருச்சிக்கு வந்துள்ளனர்.

கோகுலேஸ்வரனின் மனைவி, இவர்களின் மகன், மகள் ஆகியோர் தமிழகத்தில் தான் பிறந்துள்ளனர். இவர்களின் குழந்தைகள், கோகுலேஸ்வரனின் பெற்றோர், மனைவியின் பெற்றோர் ஆகியோரும் இதே முகாமில் தான் உள்ளனர். கோகுலேஸ்வரன், எம்எஸ்சி (பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ்) முடித்து தனியார் நிறுவனத்தில் பணியாற்றுகிறார்.

கோகுலேஸ்வரன், நளினியைப் போலவே மேலும் 15 பேருக்கு, தனித்தனியாக உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்து அந்த உரிமையைப் பெற்றுத் தந்துள்ளதாகச் சொல்கிறார் வழக்கறிஞர் ரோமியோ ராய்.

இவர்களில் பலரும் பாஸ்போர்ட் பெற்றுள்ளனர். கோகுலேஸ்வரனுக்கு தற்போது நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் வாக்குரிமை கிடைத்து விட்டாலும் இன்னும் அவருக்கு பாஸ்போர்ட் கிடைக்கவில்லை.

இந்திய குடியுரிமைச் சட்டத்தின்படி, 1987 க்கு முன்பு இந்தியாவில் பிறந்த இலங்கைத் தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை வழங்க வேண்டுமென்ற உத்தரவின்படி, நான் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்தேன். அது நிராகரிக்கப்பட்டது. அதை எதிர்த்து மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். எனக்கு பாஸ்போர்ட் வழங்குமாறு, கடந்த 2025 நவம்பர் 14 அன்று உத்தரவு வழங்கியது. ஆனால் இதுவரையிலும் எனக்கு பாஸ்போர்ட் கிடைக்கவில்லை.'' என்றார் கோகுலேஸ்வரன்.

### ஒரு வார்த்தை விடுபட்டதால் மறுக்கப்பட்டது பாஸ்போர்ட்?

இதற்கான காரணத்தை விளக்கிய அவர், நீதிமன்ற உத்தரவை டைப் செய்யும் போது ஏற்பட்ட பிழையால் தான் தனது பாஸ்போர்ட் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

திருச்சி கோட்டபட்டு இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் இவர் மீது எந்த கிரிமினல் வழக்கும் இல்லை என்று அந்தப் பகுதியிலுள்ள கேகே நகர் காவல் நிலையத்திலிருந்து இவருடைய பெயருக்கு சான்றிதழ் தரப்பட்டுள்ளது.

இது குறித்து பிபிசியிடம் பேசிய வழக்கறிஞர் ரோமியோ ராய், ``இந்தியாவில் பிறக்கும் அனைவருக்கும் குடியுரிமை வழங்கப்பட்டு வந்த நிலையில், 1986ல் திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அது 1987 ஜூலை 1ல் தான் அமலுக்கு வந்தது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் கோகுலேஸ்வரன் பிறந்தார். அதை வைத்தே நாங்கள் வாதாடி அவருக்கு இந்த உத்தரவை பெற்றுத் தந்தோம். ஆனால் பாஸ்போர்ட் மறுக்கப்பட்டதற்கு காரணம் வேறு. என்றார்.

அதுபற்றி விளக்கிய அவர், அந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்த பதில் மனுவிலேயே, அவர் மீது எந்த கிரிமினல் வழக்கும் இல்லை என்பதற்கான காவல்துறை தந்த சான்று ஆதாரத்தை சமர்ப்பித்தோம். ஆனால் நீதிமன்ற தீர்ப்பை டைப் செய்யும் போது `நோ கிரிமினல் கேஸ் பெண்டிங்' என்பதில் `நோ என்பது விடுபட்டு விட்டது. அது முழுக்க முழுக்க தட்டச்சு பிழை தான் என்றார்.

கோகுலேஸ்வரனுக்கு கேகே நகர் காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட சான்றிதழ், நீதிமன்றத்தில் பெறப்பட்ட உத்தரவு அனைத்தையும் பிபிசியிடம் அவர்கள் பகிர்ந்தனர். அவர் அகதிகள் முகாமில் இருப்பதால் பாஸ்போர்ட் ஆணையத்தின் விசாரணை நடைமுறைகள் தீவிரமாகவுள்ளன. இது பற்றி பாஸ்போர்ட் ஆணையம் கேட்ட விளக்கத்தை நாங்கள் தெளிவாக அனுப்பி விட்டோம். காவல்துறையிடமும் பாஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து மறு விசாரணைக்கு தபால் அனுப்பியுள்ளனர். இவை கிடைத்த பின்பு பாஸ்போர்ட் கிடைத்து விடும்'' என்றார் வழக்கறிஞர் ரோமியோ ராய்.

இவரைப் போலவே பாஸ்போர்ட்டுக்காக விண்ணப்பித்து ஏராளமானவர்கள் காத்திருப்பதாகவும் கூறுகிறார் கோட்டபட்டு முகாமில் வசிக்கும் மாலினி.

பிபிசியிடம் பேசிய அவர், எங்களுக்கு இப்போது முகாம்களில் நிறைய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளது. தமிழக அரசு பல வித உதவிகளைச் செய்து வருகிறது. ஆனால் இந்தியாவில் நிரந்தரக் குடியுரிமை வேண்டுமென்பது தான் இங்குள்ள 80 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.'' என்றார்.

இந்திய குடியுரிமைச் சட்டத்தின்படி, (18ம் பக்கம் பார்க்க)

# தமிழகத் தேர்தலும் நாமும்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



தமிழ்நாட்டில் நடக்கும் தேர்தல் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர் சீமானின் அபிமானிகள். இன்னொரு பகுதியினர் விஜயை ஆதரிக்கிறார்கள். லண்டனில் சீமானின் வெற்றியை வேண்டி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவருடைய கட் அவுட் அங்கே நிறுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்திலும் திருநெல்வேலி நல்லூர் போன்ற சந்ததிகளிலும் வேறு சில சந்திகளிலும் சீமானின் கட்அவுட்கள் நிறுவப்பட்டுள்ளன. மானிப்பாயில் சீமானை ஆதரித்து மாட்டுவண்டில் ஊர்வலம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. சீமானுக்கு மட்டுமல்ல விஜேக்கும் ஸ்டாலினுக்கும் பதாதைகளை கட்டப்பட்டன.

சீமான் கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரையும் அந்த இயக்கத்தின் தலைவருடைய முகத்தையும் சின்னங்களையும் தொடர்ச்சியாக தன் அரசியலுக்கு அடித்தளமாக பயன்படுத்தி வருகிறார். ஈழத்தமிழர்கள் தொடர்பில், 2009இற்குப் பின்னரான தமிழகக் கூட்டுஉளவியலில் காணப்படும் குற்றவுணர்ச்சிக்கு அவர் தலைமை தாங்க முயற்சிக்கிறார். அதன் மூலம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தப் பிராந்தியத்திலேயே விடுதலைப் புலிகளின் பெயரை தொடர்ந்து பகிரங்கமாக, பயமின்றி உச்சரிக்கும் ஒருவராக அவர் பார்க்கப்படுகிறார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை உண்டு. வெளிப்படையாக அந்த இயக்கத்தை ஆதரித்தாலோ அல்லது அந்த இயக்கத்தின் லட்சியங்களை பகிரங்கமாக ,நேரடியாக மேலுயர்த்தினாலோ இந்தியச் சட்டங்கள் குறிப்பிட்ட நபரின் மீது அல்லது அமைப்பின் மீது பாயும். எனினும் சீமான் அந்த அமைப்பை நினைவுபடுத்தும் முகங்களையும் சின்னங்களையும் கோஷங்களையும் தொடர்ந்தும் அரசியல் மேடையில் பேசுபொருளாக வைத்திருக்கிறார்.

அதில் அவர் துணிந்து ரிஸ்க் எடுக்கிறார் என்று ஈழத்தமிழர்களில் ஒரு பகுதியினர் நம்புகிறார்கள். அதனாலேயே அவரை ஆதரிக்கிறார்கள். அதேசமயம் அவரை எதிர்ப்பவர்கள் கேட்கிறார்கள், இந்தியாவின் சட்டத் தடையை மீறி எப்படி சீமானால் இப்படி வெளிப்படையாக விடுதலைப் புலிகளை ஆதரிக்க முடிகிறது என்று? எனினும் சீமானின் விசுவாசிகள் மேற்கண்ட கேள்வியைப் பொருட்படுத்துவதில்லை.

கிடைக்கும் தகவல்களின்படி சுவிற்சர்லாந்தில் மட்டும் சீமானின் தேர்தல் தேவைகளுக்காக கிட்டத்தட்ட 8 லட்சம் சுவிஸ் பிராங்குகள் சேகரித்து அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது இலங்கைக் காசில் எவ்வளவு தொகை? அது போல ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் ஏனைய மேற்கத்திய நாடுகளிலும் சீமானுக்கு காசு திரள்கிறது.

சீமான் தனது உள்நாட்டு அரசியல் எதிரிகளை எதிர் கொள்வதற்காக சில சமயங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சின்னங்களையும் முகங்களையும் ஒரு கேடயமாக முன்நிறுத்துவார். அப்பொழுது அவருக்கு மட்டும் அடி விழாது அந்த இயக்கத்துக்கும் சேர்ந்து விழும்.

தொகுத்துப் பார்த்தால் சீமானுக்கு ஈழத் தமிழர்கள் மத்தியில் கிடைக்கும் ஆதரவு என்பது பெருமளவுக்கு அவருடைய விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டின் வழி கிடைத்தது தான். மேலும் சீமானின் தற்சார்பு பொருளாதாரம், மக்கள் நேய பொருளாதாரம், பசுமை பொருளாதாரம் போன்று கொள்கைகள் காரணமாகவும் அவருக்கு ஆதரவு உண்டு.

அதேசமயம் நடிகர் விஜய்யின் விசிறிகளும் அவருடைய வெற்றியை எதிர்பார்க்கிறார்கள். ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறார்கள். இந்த ஆதரவு கொள்கை வழிபட்டது அல்ல. விஜய் ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் அவ்வப்போது தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையிலானதும் அல்ல. அது பெருமளவுக்கு சினிமா ரசிக மனோநிலையில் இருந்து வருவது. தமது அபிமான திரை நாயகன் ஓர் அரசியல் தலைவராகவும் வெற்றிபெற வேண்டும் என்று அவருடைய விசிறிகள் எதிர்பார்க்கிறார்கள். சீமானை ஆதரிப்பவர்களைப் போல இவர்களிடம் கொள்கை ரீதியான நிலைப்பாடுகள் கிடையாது.

தமிழகத்தில் நடக்கும் ஒரு தேர்தலில் இவ்வாறு இரண்டு தமிழக வேட்பாளர்களை, அவர்களுடைய கட்சிகளை ஈழத்தமிழர்கள் ஆதரிப்பது என்பது 2009க்கு பின்னரான வளர்ந்து வரும் ஒரு போக்கு. தாங்கள் வாக்களிக்க முடியாத ஒரு தேர்தலுக்காக உழைப்பது?




இதற்கு முன்னரும் திராவிட கட்சிகளுக்கு ஈழத்தமிழர்கள் மத்தியில் அபிமானிகள் இருந்தார்கள். திராவிட இயக்கத் தலைவர்களுக்கும் அபிமானிகள் இருந்தார்கள். குறிப்பாக எம்ஜிஆருக்கும் வைகோவிற்கும் விஜயகாந்துக்கும் ஆதரவாளர்கள் இருந்தார்கள். அவர்களும் தங்களுடைய அபிமான தலைவர்கள் வெல்ல வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் தமிழகத் தேர்தலில் ஈழத் தமிழர்கள் இவ்வளவு அதிகரித்த ஆர்வம் காட்டுவதும் அந்த ஆர்வமானது கோடிக்கணக்கான ரூபாய் உதவிகளாக திரள்வதும் கடந்த 2009க்கு பின்னரான ஒரு புதிய போக்குத்தான்.

கடந்த 16ஆண்டுகளாக ஈழத்தமிழ் அரசியலில் நிலவும் தலைமைத்துவ வெற்றிடம்.அதனால் ஏற்பட்ட வெளியாருக்காகக் காத்திருக்கும் அரசியல் என்பவற்றின் விளைவா இது?

தாம் போற்றும் ஓர் இயக்கத்தை தமிழகத்தில் உயர்த்தும் ஒருவரை ஆதரிப்பதும் அல்லது தமது அபிமான திரை நாயகரை ஆதரிப்பதும் அவரவர் விருப்பம். அவ்வாறு ஆதரிக்கவும் அவர் வெல்லவேண்டும் என்று உழைக்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு. அதேசமயம் ஓர் அரசியல் சமூகமாக ஈழத் தமிழர்கள் தமிழகத் தேர்தல்களில் மட்டுமில்லை, இந்திய தேர்தல்களிலும் எப்படிப்பட்ட ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்?

இதில் பிரதானமாக இரண்டு வகை நிலைப்பாடுகளை எடுக்கலாம். ஒன்று கொள்கை வழி நிலைப்பாடு. இரண்டாவது தந்திரோபாய நிலைப்பாடு.

கொள்கை வழி நிலைப்பாடு என்பது ஏற்கனவே இக்கட்டுரையில் கூறப்பட்டது போல, கொள்கை ரீதியாக ஈழத் தமிழர்களோடு நெருக்கமாகக் காணப்படும் தமிழகக் கட்சிகளை ஆதரிப்பது. தந்திரோபாய நிலைப்பாடு என்பது ஈழத் தமிழர்கள் ஒரு தேசமாக முடிவெடுப்பது. இதை இன்னும் ஆழமான வார்த்தைகளில் சொன்னால் ஓர் அரசைப் போல சிந்திப்பது.

தமிழகத்திலும் சரி முழு இந்தியாவிலும் சரி யார் தலைவராக வர வேண்டும் என்பது அங்குள்ள வாக்காளர்களின் விருப்பம். வாக்காளர்களின் விருப்பப்படி யார் தெரிவு செய்யப்படுகிறாரோ அவர்தான் அங்கே அரசியல் அதிகாரத்தின் மையத்தில் இருப்பார்.எனவே ஒரு தேசமாக, ஒரு அரசைப் போல முடிவெடுத்தால் அந்த அதிகார மையத்தைக் கையாள வேண்டிய தேவை, அந்த அதிகார மையத்தோடு என்கேஜ் பண்ண வேண்டிய நிர்ப்பந்தம் ஈழத்தமிழர்களுக்கு உண்டு. இதில் தமக்கு பிடித்த தலைவர் இருக்கிறாரா, பிடித்த கட்சி இருக்கிறதா என்றெல்லாம் பார்த்து ஈழத்தமிழர்கள் உறவாட முடியாது. இந்திய மக்களும் தமிழக மக்களும் யாரைத் தெரிவு செய்கிறார்களோ, அவர்களோடு இடையூடாடுவது. அது தான் ராஜதந்திரம்.

கொள்கை நிலைப்பாடுகளுக்கும் ராஜதந்திர நிலைப்பாடுகளுக்கும் இடையில் ஒரு சமநிலையைப் பேண வேண்டியிருக்கும். அரசியலில் பல சந்தர்ப்பங்களில் அறம் சார்ந்த நிலைப்பாடுகளுக்கும் ராஜதந்திர நிலைப்பாடுகளுக்கும் இடையில் சமநிலையைக் காணமுடியாமல் இருக்கும். அப்பொழுது என்ன செய்வது?

உதாரணமாக தமிழ்நாட்டில் திமுக வெல்கிறது என்று வைத்துக் கொண்டால் சீமானை ஆதரிக்கும் ஈழத்தமிழர்கள் புதிய அரசாங்கத்தோடு தொடர்புகளை வைத்துக் கொள்ள மாட்டார்களா?

ஏன் அதிகம் போவான்? இப்பொழுது சீமானுக்கு கோடிகோடியாக காசைத் திரட்டும் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் பெரும்பாலான நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தடை உண்டு. அந்த நாடுகளில் அந்த அரசின் கீழே தான் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்கிறார்கள் உழைக்கிறார்கள் அதில் ஒரு பகுதியை சீமானுக்கும் கொடுக்கிறார்கள். ஈழத்தமிழ் அரசியல் தொடர்பான மேற்கு நாடுகளின் கொள்கை முடிவுகளோடு உடன்பட முடியாது என்பதற்காக யாரும் அந்த நாடுகளில் இருந்து தமது பிரஜா உரிமைகளைத் தூக்கி எறிந்து விட்டு வெளியேறுவதில்லைத் தானே? எனவே நீதியானவர்களிடந்தான் ஈழத்தமிழர்கள் நீதியை எதிர்பார்க்கலாம் என்றால் அல்லது கொள்கை உடன்பாடு உடையவர்களோடு மட்டுந் தான் ஈழத் தமிழர்கள் உறவாடலாம் என்று சொன்னால், அரசு இல்லாத ஈழத் தமிழர்களுக்கு உலகில் எத்தனை நண்பர்கள் கிடைப்பார்கள்? அவர்களில் எத்தனை பேர் முடிவெடுக்கும் அதிகாரத்தோடு இருப்பார்கள்?

தமிழகத் தேர்தலில் ஈழத் தமிழர்கள் ஆர்வம் காட்டலாம். ஆனால் .அங்கு யாரை தமிழக மக்கள் தேர்ந்தெடுக்கிறார்களோ, அந்த அரசாங்கத்தோடு ஈழத் தமிழர்கள் ஓர் அரசியல் சமூகமாக எப்படி இடையூடாடுவது என்று சிந்திப்பதே பொருத்தமானது..

ஈழத்தமிழ் அரசியலைப் பேசவேண்டிய நிர்ப்பந்தம் தமிழகத்தில் உண்டு. அதனால்தான் திமுக இலங்கை இனப் பிரச்சனைக்குத் தீர்வாக கூட்டாட்சியை ஆதரிக்கின்றது. விஜய் ஈழத் தமிழர்களின் அரசியலைப் பற்றி அறிக்கையிட வேண்டியுள்ளது. அந்தத் தேவையை வைத்துக் கொண்டு எப்படி புதிய தமிழக அரசுடன் இடையூடாடுவது என்று ஈழத் தமிழர்கள் சிந்திக்கலாம். மேலும் கடந்த பல தசாப்தகால தமிழக தேர்தல் முடிவுகளைத் தொகுத்துப் பார்த்தால் ஒருவிடயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஈழ ஆதரவு நிலைப்பாடு என்பது தமிழகத் தேர்தல்களில் ஒரு பிரதான தீர்மானிக்கும் சக்தி இல்லை என்பது தான்.

அவ்வாறு ஈழத்தமிழர் களுக்காக துணிச்சலான முடிவுகளை எடுத்த பல தலைவர்கள் தமிழ்நாட்டில் தேர்தலில் வெற்றி பெறவில்லை. எனவே தமிழகத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர் எவ்வளவு தீவிரமாக ஈழத்தமிழ் ஆதரவு நிலைப்பாட்டிக் கொண்டிருந்தாலும் அவரால் ஈழத் தமிழர்களுக்கு தனி நாட்டை வாங்கிக் கொடுக்க முடியாது.

தனிநாடு மட்டுமல்ல 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தச் சொல்லி இலங்கை அரசாங்கத்தின் மீது குறைந்தபட்ச நிர்பந்தங்களைக் கூட பிரயோகிக்க முடியாது .பதிலாக ஈழத் தமிழர்களோடு உணர்வபூர்வ கூட்டொருமைப்பாட்டை வெளிப்படுத்தலாம். தமிழகம் கொந்தளித்தால் அது புதுடில்லியில் எதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.


இந்திய அரைக் கூட்டாட்சிக் கட்டமைப்பிற்குள்( quasi-federal state) வரையறுக்கப்பட்ட அதிகாரங் களைக் கொண்ட ஒரு மாநில முதலமைச்சர் என்ன செய்யலாம் என்பதில் அடிப்படையான வரையறைகள் உண்டு.

தமிழகத்தில் மட்டுமல்ல.ஈ ழத்தமிழர்கள் அதிக தொகையாக புலம் பெயர்ந்து வாழும் கனடாவிலும் நிலைமை இதுதான். கனடாவில் அமைச்சராக இருக்கும் ஹரி ஆனந்தசங்கரி அங்கே ஈழத்தமிழராக முடிவெடுக்க முடியுமா? அல்லது கனேடிய அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளின் அடிப்படையில் முடிவெடுக்க வேண்டுமா?

எனவே தமிழகத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அது தமிழக மக்களின் விருப்பம் என்பதை ஈழத்தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய தமிழக அரசாங்கத்தோடு எப்படி இடையூடாடுவது என்று சிந்திக்க வேண்டும்.

# அரசாங்கத்தின் தூய்மை முத்திரையை சேதப்படுத்தும் முயற்சிகளில் எதிரணி மும்முரம்

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை, அதன் பதவிக் காலத்தில் ஒன்றரை வருடங்களுக்குள்ளாக பதவி விலகுமாறு எதிரணி அரசியல் கட்சிகள் கேட்கத் தொடங்கியிருக்கின்றன.




கூட்டு எதிரணி என்று தங்களை அழைத்துக் கொள்கின்ற மிகவும் பலவீனப்பட்டிருக்கும் இந்த கட்சிகளிடம் (தோல்வி நிச்சயம் என்று தெரிந்திருந்தும் அவ்வப் போது அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக் கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டு வந்து பாராளுமன்றத்தில் ஆவேசமாகப் பேசி விட்டுப் போவதைத் தவிர) அரசாங்கத்துக்கு எதிராக உருப்படியான அரசியல் தந்திரோபாயம் எதுவும் இல்லை. ஆனால், கொழும்பில் அடிக்கடி நடத்துகின்ற செய்தியாளர்கள் மகாநாடுகளை மாத்திரம் கூட்டாக நடத்துகின்றன.

2025 மே உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி நாடளாவிய ரீதியில் பெற்ற வாக்குகள் 2024 பாராளுமன்ற தேர்தலில் அது பெற்ற வாக்குகளை விடவும் சுமார் 18 இலட்சம் குறைவாக இருந்ததனால், அடுத்து வரக்கூடிய எந்தவொரு தேர்தலிலும் ஆளும் கட்சி பாரிய வீழ்ச்சியைச் சந்திக்கும் என்ற நம்பிக்கையில் இந்த எதிரணி கட்சிகள் மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வந்தன.

மாகாணசபை தேர்தல்கள் எட்டு வருடங்களாக நடத்தப்படாமல் இருப்பதால் மாகாணங்களின் நிருவாகங்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்படாமல் அவர்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்படுகிறது என்ற கவலையில் அந்த தேர்தல் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக கூறமுடியாது. அரசாங்கம் மக்கள் செல்வாக்கை இழந்து வருகிறது என்று காண்பிக்க வேண்டும் என்பதே இந்த கட்சிகளின் நோக்கம்.

பதவிக்கு வந்த ஒரு வருடத்துக்குள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக தேசிய தேர்தல்களின் போது வாக்குறுதியளித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது மாகாண சபைகளுக்கு எந்த முறையின் கீழ் தேர்தல்களை நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அண்மையில் நியமித்தது. மூன்று தடவைகள் கூடிய தெரிவுக்குழுவின் அடுத்த கூட்டம் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்ற நிலையில் அதற்கு நெருக்குதலைக் கொடுக்கக் கூடிய எந்தவொரு போராட்டத்தையும் நடத்துவதற்கான திராணி எதிரணி கட்சிகளுக்கு இல்லை. மறுபுறத்தில், மாகாண சபை தேர்தல்களை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கு மக்கள் போராட்ட இயக்கத்தை முன்னெடுக்கப் போவதாக இடைக்கிடை அறிவிக்கும் சில தமிழ் கட்சிகள் சில நாட்களில் அதை மறந்து விடுகின்றன. உண்மையில், இது விடயத்தில் வடக்கு, கிழக்கில் இருந்தோ அல்லது தென்னிலங்கையில் இருந்தோ அரசாங்கத்துக்கு எந்தவிதமான நெருக்குதலும் கிடையாது.

தற்போது தென்னிலங்கை எதிரணி கட்சிகள் பதவி துறந்து இடைக் காலப் பொதுத்தேர்தலுக்கு வழி விடுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கத் தொடங்கியிருக்கின்றன.

ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, சர்வஜன சக்தி மற்றும் சில கட்சிகள் கடந்த வியாழக்கிழமை கூட்டிய செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினார். தரங் குறைந்த நிலக்கரி இறக்குமதி, இணைய ஊடுருவல் மூலமாக திறைசேரியின் பணம் மோசடி என்று பல்வேறு ஊழல்கள் கடந்த சில வாரங்களில் இடம் பெற்றிருப்பதை காண்கிறோம். அரசாங்கம் அதன் இயலாமையை தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறது. தரங்குறைந்த நிலக்கரி கொள்வனவு போன்ற முறைகேடுகளை ஒரு அமைச்சர் தனியாக திட்டமிட்டுச் செய்ய முடியாது. அமைச்சரவையின் முழுமையான ஆதரவு இல்லாமல் அவரால் அதைச் செய்திருக்க முடியாது. அதனால், அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று நாம் கோருகிறோம்'' என்று தெரிவித்தார்.

இதனிடையே, கடந்த வாரம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் இடம 'பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச புத்தாண்டில் மீண்டும் ஆட்சியதிகாரத்தைப் பெறுவதற்கான முக்கியமான திட்டம் ஒன்று தங்களிடம் இருப்பதாகவும் விரைவில் ஏற்படப் போகும் அரசியல் மாற்றத்துக்கு தங்களது கட்சி முழுமையாகத் தயாராக இருக்கிறது என்றும் கூறினார்.

தங்களிடம் இருக்கும் திட்டம் குறித்து ராஜபக்ச விரிவாகக் கூறவில்லை. ராஜபக்ச குடும்பத்துக்கு நீண்ட நாட்களாக அதிகாரத்தில் இல்லாமல் இருப்பது கஷ்டமாக இருக்கலாம். ஆனால், நாட்டு மக்களுக்கு மீண்டும் எதற்காக அந்த குடும்பத்தின் ஆட்சி தேவை? இலங்கை அரசியலில் முன்னரும் பல தசாப்தங்களாக குறிப்பிட்ட சில மேல்வர்க்க குடும்பங்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தன. அவர்களை மக்கள் தேர்தல்களில் தான் தோற்கடித்து அதிகாரத்தில் இருந்து இறக்கினார்கள். ஆனால், இலங்கையில் மாத்திரமல்ல, தெற்காசியாவிலேயே. முதன் முதலாக மக்கள் கிளர்ச்சியின் மூலமாக தூக்கியெறியப்பட்ட ஆட்சி தங்களது குடும்பத்தின் தலைமையில் இருந்தது என்பதை ராஜபக்சாக்கள் மறக்கக் கூடாது.

தேசிய மக்கள் சக்தியை பாராளுமன்றத்தில் தோற்கடிக்க முடியாது. அதனால், முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களை பேரம் பேசி விலைக்கு வாங்கி இன்றைய அரசாங்கத்தைப் பலவீனப் படுத்துவது என்பது சாத்தியமில்லாத ஒரு காரியம். அதனால், பாராளுமன்றத்தில் கொடுக்கும் தொல்லைகளினால் அரசாங்கத்தை எதுவும் செய்துவிட முடியாது.

தேசிய தேர்தல்களின் போது நடைமுறைச் சாத்தியத்தைப் பற்றி கிஞ்சித்தும் சிந்திக்காமல் தேசிய

கட்டுரையாளர்:-
இலங்கையில் இருந்து
- வீ.தனபாலசிங்கம் -



மக்கள் சக்தி பெருவாரியான வாக்குறுதிகளை அள்ளிவீசியது. அவற்றை நிறைவேற்ற முடியாமல் அரசாங்கம் தடுமாறிக் கொண்டிருந்த போது அதற்கு 'கெடுதியில் நன்மை' போன்று கடந்த கடந்த வருட பிற்பகுதியில் 'டித்வா' சூறாவளியும் இந்த வருடம் மார்ச் மாதம் முதல் மத்திய கிழக்குப் போரும் அமைந்து விட்டன. அந்த போரின் விளைவாக முழு உலககுமே பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கின்ற சூழ்நிலை வாக்குறுதிகளைக் காப்பாற்றாமல் இருப்பதற்கு அரசாங்கத்துக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

புதிய அரசியல் கலாசாரமும் முறைமை மாற்றமும் காற்றோடு போய்விட்டன. ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால், அது ஏற்கெனவே நடைமுறையில் இருந்த முறைமைக்கு அரசாங்கம் தன்னை இசைவாக்கிக் கொண்டிருப்பதை மாத்திரமே கூறமுடியும்.

பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தின் தவறான ஆட்சி முறைக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் விளைவாக நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை மாற்றம் அதிகாரத்துக்கு கொண்டு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஊழல் முறைகேடுகளுக்கும் அதிகார துஷ்பிரயோகத்துக்கும் எதிராக கடுமையான விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியிருக்கிறது.

ஆனால், அதேவேளை, முன்னைய ஆட்சியாளர்களுக்கு சேவை செய்த அதே ஊழல்தனமான அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தியே அரசாங்கம் நிருவாகத்தை நடத்த வேண்டியிருப்பதால் பல்வேறு நெருக்கடிக்கு உள்ளாகிறது. அண்மைக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற முறைகேடுகளை இந்த பின்புலத்திலேயே நோக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தூய்மை முத்திரையை சேதப்படுத்துவதற்கு எதிரணி கட்சிகள் அவற்றினால் இயன்றவரை முயற்சிகளை மேற் கொள்கின்றன. அதற்கு முகங் கொடுப்பதில் அரசாங்கம் தடுமாற வேண்டிய அளவுக்கு சில ஊழல் குற்றச் சாட்டுக்கள் அமைகின்றன என்பது உண்மை.

# இருவரும் சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்தாலும் எம்.ஜி.ஆரையும் விஜய்யையும் ஒப்பிடுவது ஒரு மேலோட்டமான செயல்!

- ரம்யா கண்ணன் -

ஒப்பீடுகள் கசப்பானவை என்றாலும், தேர்தல் காலங்களில் அவற்றைத் தவிர்க்க முடியாது. தற்போதைய அரசியல் நிலப்பரப்பை கடந்த காலத்தின் கண்ணாடியில் பார்த்துப் புரிந்து கொள்ளும் முயற்சியில் கட்சிகள், தலைவர்கள், அவர்களின் தேர்தல் அறிக்கைகள், செயல்திட்டங்கள், நலத் திட்டங்கள், சித்தாந்தங்கள் என அனைத்தும் விரிவாக அலசப்படுகின்றன.

தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்ட சபை தேர்தலில் தவிர்க்க முடியாத ஒரு ஒப்பீடு எதுவென்றால், நடிகராக இருந்து அரசியல்வாதியாக மாறியிருக்கும் விஜய்யை, மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனுடன் (எம்.ஜி.ஆர்) ஒப்பிடுவது தான்.

இது உண்மையில் ஒரு மேலோட்டமான ஒப்பீடு. இருவருமே நடிகர்களாக இருந்து வாய்ப்பு கிடைத்த போது அரசியலில் குதித்தனர் என்ற ஒரே ஒரு உண்மையைத் தவிர, மற்ற அனைத்து ஒப்பீடுகளும் இங்கே முடிவுக்கு வருகின்றன.

இது குறித்து எழுத்தாளரும், திரைப்பட இயக்குநரும் கல்வியாளருமான கே. ஹரிஹரன் விளக்குகையில், 'தேர்தல் என்பது 'முதல் நாள் முதல் காட்சி' போன்ற நிகழ்வு அல்ல. தேர்தல் களத்தில் இறங்கத் திட்டமிடுபவர்கள் முதலில் கள நிலவரத்தைச் சோதித்துப் பார்ப்பது அவசியம். எம்.ஜி.ஆர் அதைச் செய்தார் அவர் அண்ணா தி.மு.க.வை தொடங்குவதற்கு முன்பே நீண்ட காலம் அவர் அரசியலில் இருந்தார்.' என்கிறார்.

எம்.ஜி.ஆர் தனது கட்சியைத் தொடங்குவதற்கு முன்னர் தி.மு.க.விலும் அரசியலிலும் பல ஆண்டுகளைக் கழித்தார். அவரது அரசியல் பிரவேசம் மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்டது. திராவிடப் பிரச்சார பாணியில் ஒவ்வொரு படத்திலும் ஒரு பாடல், ஒடுக்கப்பட்டவர்களின் நாயகனாக அவரை உயர்த்தும் வகையிலான திரைப்படங்கள் என்று அவர் திட்டமிட்டுச் செயல்பட்டார்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த 1967 ஆம் ஆண்டு என்பது அக்கட்சி தேர்தலில் களம் காணத் தொடங்கிய மூன்றாவது முறையாகும். இந்த வெற்றிக்கு இந்தி எதிர்ப்புப் போராட்டம், கட்சிப் பணிகளுக்காக கே. காமராஜர் முதல்வர் பதவியிலிருந்து விலகியது மற்றும் நடிகர் எம்.ஆர். ராதாவால் எம்.ஜி.ஆர் சுடப்பட்டதால் உருவான அனுதாப அலை ஆகியவை முக்கிய காரணிகளாக இருந்தன.

தி.மு.க.வின் தலைமையைப் பொறுப்பேற்ற மு. கருணாநிதிக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்ட பிறகு, 1972 ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர் பிரிந்து சென்று அண்ணா தி.மு.க. வை நிறுவினார். இது மாநிலத்தில் நீண்ட காலம் நீடித்த திராவிடக் கட்சிகளின் இரு முனைப் போட்டிக்கு வழிவகுத்தது.

1977ஆம் ஆண்டில் அண்ணா தி.மு.க. சந்தித்த முதல் தேர்தல் ஒரு பிரமாண்டமான வெற்றியாக அமைந்தது. இது மாநில மற்றும் தேசிய அளவிலான சிறந்த அரசியல் அறிமுகங்களில் ஒன்றாகும். தனது முதல் மாநில அளவிலான போட்டியிலேயே அப்போதைய ஆளுங்கட்சியான தி.மு.க.வைத் தோற்கடித்து, திராவிட அரசியல் நிலப்பரப்பில் அந்த கட்சி தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. இந்த வெற்றி தான் சில விமர்சகர்களை விஜய்யின் அரசியல் வருகையுடன் தவறாக ஒப்பிடத் தூண்டுகிறது.

இருவருமே தமிழ் சினிமாவின் பிரபலமான நடிகர்கள் என்பதைத் தாண்டி, எம்.ஜி.ஆருக்கும் விஜய்க்கும் இடையிலான மற்ற ஒப்பீடுகள் எடுபடாது,' என்கிறார் ஹரிஹரன்.





எம்.ஜி.ஆர் ஒரு மக்கள் தலைவருக்கான பிம்பத்தைக் கட்டமைக்கத் திரைப்படங்களைப் பயன்படுத்தினார். ஆனால் விஜய்யின் திரைப்பயணத்தில் அத்தகைய கட்டமைப்பு ஏதுமில்லை. அவர் பெரும்பாலும் தனித்தே இயங்குபவர் அரசியல் நிகழ்வுகளிலோ அல்லது ஊடக நேர்காணல்களிலோ அரிதாகவே பங்கேற்பவர். ஒரு வகையில் தனது தனிப்பட்ட வாழ்க்கையை மிகவும் இரகசியமாகவும், தனிமைப்படுத்தப்பட்டும் வைத்திருப்பதன் மூலமே தனது செல்வாக்கை வளர்த்துக்கொண்டார்.

தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.) கட்சியைத் தொடங்கும் வரை விஜய்க்கு சமூக அடிமட்ட அளவில் நேரடித் தொடர்பு இல்லை. மக்களுடன் பணியாற்றிய அனுபவம் ஏதுமின்றி, பல தசாப்தங்களாக அடிமட்ட அனுபவம் கொண்ட கட்சிகளுக்கு மாற்றாகத் தன்னை அவர் நிலைநிறுத்துகிறார்.'

ஆனால் நாம் ஒப்பிட்டுத் தான் ஆக வேண்டும் என்றால் விஜய்க்கும் தெலுங்கு தேசம் கட்சித் தலைவரும் ஆந்திராவின் முன்னாள் முதலமைச்சருமான என்.டி. ராமாராவிற்கும் (என்.டி.ஆர்) இடையே அதிக ஒற்றுமைகள் இருக்கலாம் என்று ஹரிஹரன் கூறுகிறார்.

இது குறித்து 'தி இந்து'வின் ஆந்திரப் பிரதேசப் பிரிவின் முன்னாள் தலைவர் தாசு கேசவ ராவ் கூறுகையில், 'என்.டி.ஆர் தன்னுடன் பயணம் செய்த சினிமா செய்தியாளர்களிடம் அரசியலுக்கு வர வேண்டும் என்ற தனது விருப்பத்தைப் பலமுறை தெரிவித்திருக்கிறார். ஆனால் யாரும் அவரை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை,' என்று விளக்குகிறார்.

ஒரு கதையின்படி என்.டி.ஆர். ஆந்திர பிரதேச சட்ட மேலவையில் ஒரு இடத்தைப் பெற விரும்பினார். ஆனால் அப்போதைய முதலமைச்சர் அஞ்சய்யா அந்த யோசனையை ஏற்கவில்லை. பவனம் வெங்கட்ராம ரெட்டி முதலமைச்சராகப் பதவியேற்கும் நிகழ்விற்கு அழைக்கப்பட்ட போது தான் என்.டி.ஆரின் அரசியல் இலட்சியங்கள் தூண்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அவர் மார்ச் 1982-ல் தெலுங்கு தேசம் கட்சியைத் தொடங்கினார். காங்கிரஸ் மற்றும் ஜனதா கட்சிகளின் தோல்வியைப் பயன்படுத்தி, ஒன்பதே மாதங்களில் தேர்தலில் வெற்றி பெற்று ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சரானார்.


அவர் 'ஆந்திரப் பெருமிதம்' என்ற விடயத்தைக் கையில் எடுத்தார் தெலுங்கு பிராந்திய உணர்வை முன்னிறுத்தி வெற்றி பெற்றார். ஆந்திராவைச் சேர்ந்த மற்றொரு சினிமா நட்சத்திரமான சிரஞ்சீவியும் தான் போட்டியிட்ட முதல் தேர்தலுக்கு ஒரு ஆண்டுக்கு முன்னரே கட்சியைத் தொடங்கினார். ஆகஸ்ட் 26, 2008 அன்று, நிலவும் அரசியல் அமைப்பிற்கு ஒரு 'மக்களை மையமாகக் கொண்ட' மாற்றை வழங்கும் நோக்கில் சிரஞ்சீவியால் பிரஜா ராஜ்யம் கட்சி தொடங்கப்பட்டது.

திருப்பதியில் அந்தக் கட்சியின் தொடக்க விழாவில் ஒரு பிரம்மாண்டமான கூட்டம் கூடியது. இது எங்கா வது கேட்டது போல் இருக்கிறதா? நீங்கள் இன்னும் கூடுதல் ஒற்றுமைகளைத் தேடினால் தர்மவரத்தில் நடந்த பிரஜா ராஜ்யம் கட்சியின் பொதுக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் இருவர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்தனர். விஜய்க்கு இது போன்ற ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவம் கரூரில் நடந்த அரசியல் பொதுக் கூட்டத்தில் ஏற்பட்டது.


விஜய்யின் முன்னால் உள்ள பாதை, கவிஞர் ராபர்ட் ஃப்ரோஸ்ட் கூறியது போல ஒரு 'மஞ்சள் கோட்டில் பிரியும் இரு சாலைகள்' போன்றது. தனியாகப் பயணத்தைத் தொடங்குவது என்பது அவரது முடிவு. ஆனால் அவர் எந்தச் சாலையில் செல்வார் என்பது நேரடியாக அவர் கையில் இல்லாவிட்டாலும், அவர் எடுக்கும் நடவடிக்கைகளின் விளைவாக அவர் எந்தத் திசையில் தள்ளப்படுகிறாரோ அதைப் பொறுத்தே அமையும். (தி இந்து)




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். உத்யோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமத மாகும். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். கணவன், மனைவி அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும்.





மிதுனராசி அன்பர்களே! புத்தி சாதூரி யமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். அடுத்தவரிடம் உங்களது செயல் திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் முடிவதில் தாமதப் போக்கு காணப்படும். தேவையற்ற மனச்சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். புதிய வாடிக்கையாளர் களிடம் நிதானமாக பேசி வியாபாரம் செய்வது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்ட வர்கள் விலகி விடுவர். முயற்சிகள் சாதக மான பலன் தரும். ராசிநாதன் செவ்வாயால் லாபம் அதி-கரிக்கும். தொழில் வியாபாரத் தில் இருந்த போட்டிகள் அகலும். தடைப்பட்ட பண உதவி கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.




கன்னிராசி அன்பர்களே! கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டியது அவசியம். சுலபமாக முடிந்து விடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமத மாகலாம். ராசிக்கு 12ல் சஞ்சரிக்கும் ராசியாதிபதி புதன் மனதில் இருந்த கவலையை போக்கி நிம்மதி தருவார். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம்.





துலாம்ராசி அன்பர்களே! செயல் திறமை அதிகரிக்கும்.நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் விரிவாக்கத்திற்கு தேவையான நிதியுதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிச் சுமை குறைந்து காணப்படும். குடும்பத்தினரிடம் நன்மதிப்பை பெறுவீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கப்பூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். கணவன், மனைவி மனம் விட்டு பேசுவது நன்மை தரும்.








தனுசுராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர் பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.




மகரராசி அன்பர்களே! எதிலும் சாதகமான நிலை காணப்படும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும். புதிய நண்பர்கள் கிடைப்பர். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடிதப் போக்கு சாதகமான பலன் தரும்.




கும்பராசி அன்பர்களே! இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். எதிர் பாராத உதவியால் நன்மை ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். எதிர் பார்த்த பணம் வந்து சேரும்.




மீனராசி அன்பர்களே! எல்லாக் காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நட்பு வகையில் கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். எதிர் பார்த்த பண உதவி கிடைக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# தீர்வு குறித்துப் பேசுதல் என்றால் என்ன?

(12ம்பக்கத் தொடர்ச்சி) ஆண்டுகள் நகர்ந்திருக்கின்றன. ஒரு அரசியல் உண்மையை நேர்மையான சொல்வதாயின், ஈழத் தமிழர் தலைமைகள் என்போரால் இப்போது தென்னிலங்கையோடு பேரம் பேசவே முடியாது. வேண்டுமானால், வார்த்தைகளால் மோதிக் கொள்ளலாம் அதாவது பல்லிலாத பாம்பு சீறுவது போன்று. இந்த விடயங்களை ஆழமாக ஆராய்ந்திருப்பதால் தான், இந்தக் கட்டுரையாளர் தொடர்ந்தும் இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான அரசியலமைப்பின் பதின் மூன்றாவது திருத்தச்சட்டம் தொடர்பிலும், அதனைத் தவிர்த்துச் செல்ல முடியாமையின் அரசியல் யதார்த்தம் பற்றியும் பேசி வந்திருக்கின்றார் - பேசிக் கொண்டிருக்கின்றார்.

ஏனெனில் இந்த ஒரு இடத்தில் தான் தமிழர்கள் இந்தியாவை அணுக முடியும். இந்தியா அதன் நலன்களில் நின்று பின்னடித்தாலும் கூட, உரிமையோடு தமிழர்கள் இந்தியாவிடம் மீண்டும், மீண்டும் செல்லலாம் ஏனெனில் இது அவர்களுடைய தலையீட்டின் காரணமாக வந்தது.

இந்த பின்புலத்தில் ஈழத் தமிழர் அரசியலில் ஒரு மூன்றாம் தரப்பிற்கான வாய்ப்பிருக்கின்றது என்றால் அது அரசியலமைப்பின் பதின் மூன்றில் மட்டும் தான் இருக்கின்றது. ஆனால் அந்த வாய்ப்பு புதிய அரசியல் யாப்பில் இல்லை.

ஏனெனில் புதிய அரசியல் யாப்பு ஒன்றின் கீழ் தமிழர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று, எந்தவொரு நிர்பந்தமும் தென்னிலங்கைக்கு இல்லை.

எங்களுடைய அரசியல் வாதம் எவர் மீதான காதலும் அல்ல வெறுப்பும் அல்ல மாறாக இன்றைய அரசியல் யதார்த்தம். பிஸ்மார்க் கூறியது போன்று அரசியல் என்பது அடிப்படையில் சாத்தியங்களை கையாளும் ஒரு கலை. அதாவது, எதனை எந்தக் காலத்தில் சாத்தியப்படுத்தாலோமோ, அதனை நோக்கிச் செயற்படுவதுதான் புத்திசாலித்தனமான அரசியல் வேலைத் திட்டமாகும். நமது பாரம்பரிய உரையாடல்களிலும் ஒரு கூற்றுண்டு காலத்தே பயிர் செய்தல்.

# காட்சிப் பொருளாகும் கொண்டாட்டங்கள்

(21ம் பக்கத் தொடர்ச்சி) நிஜமான அன்யோன்யம் குறைந்து, மேலோட்டமான தொடர்புகள் அதிகரிப்பது மனிதர்களைத் தனிமைக்குள் தள்ளுகிறது. தொழில் நுட்பம் என்பது நம் வாழ்வை எளிதாக்க வேண்டுமே தவிர, நம் உணர்வுகளை ஆக்கிரமிக்கக் கூடாது. நிழற்படங்கள் எடுப்பதைக் குறைத்து விட்டு, மனிதர்களை நேரில் பார்ப்போம். திரை களுக்குப் பின்னால் ஒளிந்திருப்பதை விடுத்து, நிஜ உலக உரையாடல்களில் ஈடுபடுவோம். குழந்தைகளுக்கு உறவுகளின் உன்னதத்தை வாழ்த்தும் விதமாக நம் நேரத்தைச் செலவிடுவோம்.

வெறும் பதிவுகளுக்காகக் கொண்டாடப்படும் எந்த ஒரு நிகழ்வும் வரலாற்றில் நிற்காது. நினைவுகளில் மட்டுமே வாழும் தருணங்கள் என்றும் அழியாது. ஆரவாரமான விளக்கு களும், நிழற்படக் கருவிகளும் அணைந்த பிறகு மிஞ்சப் போவது என்னவோ நாம் பகிர்ந்துகொண்ட அந்த அன்பின் உரை யாடல்கள் மட்டும் தான். எனவே, பிம்பங்களைத் தேடுவதை நிறுத்தி விட்டு, மீண்டும் மனிதர்களைத் தேடத் தொடங்குவோம். அப்போது தான் நம் பண்பாடு சிதையாமல் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படும்.

# தமிழக சட்டசபைத் தேர்தலில் 40 வயதில் முதல் முறையாக வாக்களித்த இலங்கைத் தமிழர்!

(14ம் பக்கத் தொடர்ச்சி) 1987 ஜீலை 1 அல்லது அதற்குப் பின் இந்தியாவில் பிறந்த ஒருவரது பெற்றோரில் யாரேனும் ஒருவர் இந்தியராக இருந்தால் மட்டுமே, அவர் இந்திய குடியுரிமை பெறமுடியும். மேலும், பெற்றோர் இருவரும் 'சட்டவிரோத குடியேறிகளாக' இருக்கக் கூடாது. இலங்கை தமிழர்கள், தமிழ்நாட்டில் பல தசாப்தங்களாக வசித்து வந்தாலும் அவர்கள் 'சட்டவிரோத குடியேறிகளாகவே' கருதப்படுகின்றனர். இந்திய குடியுரிமை சட்டம் 1955 பிரிவு 2(1) (டி) நாடற்றவர்களையும், அகதிகளையும் 'சட்ட விரோத குடியேறிகள்' என்று வரையறுக்கிறது.

சென்னையைச் சேர்ந்த பகிசன் என்பவர், இலங்கைத் தமிழர்களான பெற்றோருக்குப் பிறந்தவர். கடந்த 2024 ஆம் ஆண்டில் அவர் பாஸ்போர்ட் வாங்கியுள்ளார். அதன் பின் இலங்கை சென்று அங்குள்ள பெண்ணை திருமணம் செய்து, அவருடைய பெயரை இணைக்க விண்ணப்பித்துள்ளார் அதைச் சேர்த்த பின்பு, அவர் பாஸ்போர்ட் பெற்றது சட்டவிரோதமானது என்று கூறி, பாஸ்போர்ட் சட்டம் 1967ன் கீழ் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு கடந்த ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டு பிணையில் வெளியே வந்தார். இதன் மூலமாக அவர் 'நாடற்றவர்' என்று அறிவிக்கப்பட்டார். அவர் தற்போது குடியுரிமை சட்டம் 1955, பிரிவு 6- ன் கீழ் 'naturalization' (இயல்புப்படுத்துதல்) அடிப்படையில் இந்திய குடியுரிமை கோரி சட்டரீதியாக போராடி வருகிறார்.

இந்த பிரிவின்படி, குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் முன், ஓராண்டு காலம் தொடர்ந்தும், அதற்கு முன்பு 14 ஆண்டுகளும் இந்தியாவில் வசித்திருக்க வேண்டும். ஆனால் குடியுரிமைச் சட்டத்தின்படி இலங்கை அகதிகளுக்கு எந்த உரிமைகளும் கிடையாது என்பதே சட்ட நிபுணர்களின் கருத்தாகவுள்ளது. இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட இலங்கைத் தமிழர்களுக்கு, அவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆவணங்கள் இல்லாதது, குடியுரிமை பெறுவதற்கு பெரும் தடையாகவுள்ளது.

இதை ஒப்புக்கொள்ளும் கோகுலேஸ்வரன், ``எங்கள் முன்னோர் சோழிங்கநல்லூரைச் சேர்ந்தவர்கள். இப்போதும் எங்கள் உறவினர்கள் இங்கு உள்ளனர். என் பெற்றோர் இலங்கையில் பிறந்திருந்தாலும் அவர்கள் இங்கே 1983ல் வந்த போது, அப்போதிருந்த துணை ஆட்சியர், எங்களின் பூர்வீகம் தமிழகம் என்பதால் இவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கலாம் என்று சான்று வழங்கியுள்ளார். ஆனால் அப்போது இலங்கை அரசு வழங்கிய ரெட் பாஸ் போர்ட் இல்லை. அதில் இவர்கள் இந்தியர்கள் என்று தான் இருக்கும். அதைக் காணவில்லை.'' என்றார். எனக்கு பாஸ்போர்ட் கிடைத்து விட்டால் அடுத்து ரேஷன் கார்டுக்கு விண்ணப்பிக்கலாம். முகாமை விட்டு வெளியே சென்று சொத்து வாங்கவும் உரிமை பெறலாம். நான் படித்து அரசு வேலைக்குப் போக முடியா விட்டாலும் எனது குழந்தைகளுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கும். இப்போது வாக்களித்திருப்பதை விட பாஸ்போர்ட் கிடைப்பதே எனக்கு முக்கியம். கிடைத்தால் வெளிநாட்டில் வேலை கிடைக்கும்.'' என்றார் அவர்.

# தமிழ்த் தலைவர்களிடம் மக்கள் எதிர்பார்ப்பது படக்காட்சிகள் அல்ல பயனுள்ள முன்னெடுப்புக்களே!

அண்மையில் இந்தியாவின் துணை ஜனாதிபதி சந்திரபுரம் பொன்னுசாமி ராதாகிருஸ்ணன் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். தனது வருகையின் போது அவர் இலங்கையின் முக்கிய தலைவர்கள் பலரையும் சந்தித்திருந்தார். அந்தவகையில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சிலரையும்



அவர் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்புக்கான திகதி, நேரம், இடம் மட்டுமன்றி யாரை அழைப்பது என்ற சகல விடயங்களும் இந்திய உயர் ஸ்தானிகரகத்தின் தெரிவுக்குரியவையாகும்.

இதற்கமைய இச்சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்த் தலைவர்களின் நடத்தைகள், கோரிக்கைகள், அது தொடர்பான துணை ஜனாதிபதியின் எதிர்வினைகள் தொடர்பாக வெளிவந்த செய்திகள் எவையும் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கை தருவதாக அமையவில்லை.

பதிலாக தமது தலைவர்கள் தொடர்பாக தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி துணை ஜனாதிபதிக்கும் கூட அதிருப்தியையே தோற்றுவித்துள்ளதை உணரமுடிகிறது. ஆனால் இதைப் பற்றியெல்லாம் அத்தலைவர்கள் கவலைப்படுவது போலத் தெரியவில்லை.

துணை ஜனாதிபதியுடனான குறித்த சந்திப்பு சம்பிரதாயபூர்வமானதொன்று மட்டுமே. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கான உத்தியோகபூர்வமான எந்த நிகழ்ச்சி நிரலையும் அது உள்ளடக்கியதொன்றல்ல. அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் இலங்கை ஆட்சியாளர்களின் நிலைப்பாடுகள் தொடர்பில் அவருக்கோ அல்லது இந்தியத் தரப்புக்கோ சொல்லித்தான் புரியவைக்க வேணுமென்ற எந்தத் தேவையுமில்லை.

அதற்கு மேலாக இந்திய அரசாங்கத்தில் அவரின் வகிபங்கு எத்தகையது என்பதுவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்பில் ஜனாதிபதிப் பதவி நிறைவேற்று அதிகாரம் கொண்டதொன்றல்ல. பெயரளவிலான அதிகாரம் கொண்டதொன்று. ஒருவகையில் 1978இல் புதிய அரசியலமைப்பு வருவதற்கு முன் இலங்கையிலிருந்த ஜனாதிபதி பதவியை ஒத்ததொன்று. அதனை 'றபர் ஸ்ராம்ப்' பதவி என்று வர்ணிப்பவர்களுமுண்டு.

ஜனாதிபதி பதவியே அவ்வாறெனில் துணை ஜனாதிபதி பதவி எவ்வாறானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அவரின் பிரதான பணி மேற்சபை அல்லது மாநிலங்கள் அவை எனப்படும் ராஜ்ய சபாவுக்குத் தலைமை தாங்குவது மட்டுமே. ராதாகிருஸ்ணன் ஆர்எஸ்எஸ் காரர். அந்த அடிப்படையில் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினர் அதற்கு மேலாக தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் அரசியல் ரீதியான முக்கியத்துவம் அவருக்கு வழங்கப்படுகிறதேயன்றி ஆட்சியாளரின் தீர்மானங்களில் அவரது செல்வாக்கு வரையறுக்கப்பட்டதொன்றாகும். இவற்றை இங்கு சுட்டிக் காட்டுவதன் நோக்கம் அவரைத் தரம் தாழ்த்துவதற்கல்ல, அவருடனான சந்திப்பினை தமிழ்த் தலைவர்கள் எவ்வாறு அரசியல் ரீதியாகக் கையாளவேண்டும் என்பதற்காகவே.

ஏனெனில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் முன்னர் அண்ணாமலையைச் சந்திப்பதற்காக யு.எஸ் ஹோட்டலில் தவம் கிடந்த சோக வரலாறும் உள்ளது.

தமிழ்த் தலைவர்கள் துணை ஜனாதிபதியைச் சந்திப்பதில் காட்டிய ஆர்வத்தை அதில் எப்படி ஒற்றுமையாக, நாகரீகமான முறையில் தாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதில் காட்ட ஏனோ தவறி விட்டனர். தொடக்கப் பள்ளியிலுள்ள பிள்ளைகள் அவள் கிள்ளிவிட்டாள், இவன் அடிச்சுப் போட்டான் என்று நடப்பது போல தம்மை அறிமுகப்படுத்திக் கொள்வதில் முரண்பாடு, கூடநின்று படப்பிடிப்பதில் முரண்பாடு, அரசியல் கோரிக்கை வைப்பதில் வேறுபாடு என பல முதிர்ச்சியற்ற நடத்தைகளை அங்கு அவர்கள் வெளிப்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது.

அயல்நாட்டு தலைவர் ஒருவர் எமது தலைவர்களைப் பார்த்து ஒற்றுமையாகுங்கள் என்று கேட்கும் நிலைமையைத் தோற்றுவித்ததை நினைத்து ஒவ்வொருவரும் வெட்கப்பட வேண்டும். குறித்த சந்திப்பில் இத் தலைவர்களின் நடத்தை தொடர்பாக கரடியே காறித்துப்பினது போல ஈபிடிபி கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா விமர்சித்திருப்பதையிட்டு இத் தலைவர்கள் சிந்திக்கவேண்டும்.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் துணை ஜனாதிபதியின் ஒற்றுமைக் கோரிக்கை தொடர்பாக குறித்த சந்திப்பில் கலந்து கொண்ட தமிழரசுக்கட்சியின் தலைமைப் பதவியை தற்போது வைத்திருக்கும் சி.வி.கே சிவஞானம் ஊடகங்களுக்கு சொன்ன விடயம் தான்.அவர் (துணை ஜனாதிபதி) எவ்வளவு பெரிய மனிசன், அவர் எங்களின் கையைப் பிடித்துக் கொண்டு ஒற்றுமையாகுங்கள் என்று சொல்வதைக் கேட்கத் தானே வேண்டும் என்ற கருத்தை சிவஞானம் முன் வைத்துள்ளார்.

உதைத் தானே மக்களும் சமூகத் தலைவர்களும் இவ்வளவு காலமும் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். போதாக்குறைக்கு சென்ற பாராளுமன்றத் தேர்தலிலும் மறைமுகமாக அதைத்தானே அவர்கள் தெரியப்படுத்தினார்கள். அப்போதெல்லாம் தேவைப்படாத ஒற்றுமை இப்போது ஏன் அவசியப்படுகிறது? உண்மையான மனமாற்றமா அல்லது மாகாண சபைத் தேர்தலுக்காக மீண்டும் ஒரு நாடகமா என மக்கள் ஐயப்படுகிறார்கள். அல்லது மக்கள் என்ன சொல்வது, மணிகட்டின மாடு சொன்னால் தான் நாம் கேட்போம் என இதன்மூலம் சொல்ல வருகிறாரா?


தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை குலைக்கப்பட்டதற்கு குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதறியதற்கும் இப்போது தமிழரசுக் கட்சி பிளவுண்டு நிற்பதற்கும் பொறுப்புக் கூற வேண்டியவர்களில் சிவிகே சிவஞானமும் ஐயாவும் ஒருவர் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது.

யுத்தத்திற்குப் பின்னரான இன்றுவைரயான காலப்பகுதியில் சிவஞானம் தமிழரசுக்கட்சியின் முக்கிய பொறுப்புக்களில் இருந்து வருகிறார். கட்சியின் முன்னைய தலைவர் மாவை சேனாதிராசா எல்லாவற்றுக்கும் ஆமாம் போட்ட நேரத்தில் இவர் அவருக்குத் தாளம் போட்டுக் கொண்டிருந்தார். பின்னர் அவரைத் தூக்கியெறிவதற்கு உடந்தையாக இருந்து விட்டு இப்போது தமிழரசைப் பிளப்பதற்கு சுமந்திரனுக்குத் தாளம்போடும் ஒருவராக மாறியுள்ளார்.

உட்கட்சிப் பிரச்சினைகளை உறுப்பினர்களே வெளியில் கதைக்காதீர்கள் என்று ஊடகங்களின் மூலம் கெஞ்சும் நிலையில் தான் இன்று தமிழரசுக் கட்சியின் ஒற்றுமை காணப்படுகிறது. அதையிட்டு அக்கட்சியில் உள்ள எல்லோருமே வெட்கப்பட வேண்டும். கடந்த காலத்தில் சிவஞானம் போன்ற மூத்த தலைவர்கள் எல்லாவற்றுக்கும் ஆமாம் போடாது சரியான முறையில் கட்சியை ஆற்றுப்படுத்தியிருந்தால் இன்று அயல்நாட்டுத் தலைவர் ஒருவர் நமது தலைவர்களுக்கு ஒற்றுமை பற்றி வகுப்பு எடுக்கும் நிலை ஏற்பட்டிருக்காதல்லவா?

மேலும் துணை ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பின் போது சமஷ்டி, கூட்டாட்சி பற்றிக் கோரிக்கை வைப்ப

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
-க. அருந்தவபாலன் -



தில் ஏதாவது விளை பயன் உண்டா? இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உட்பட முக்கியமான இந்தியத் தலைவர்களுடனான சந்திப்புக்களிலும், கடிதங்களிலும் இந்தக் கோரிக்கைதானே தொடர்ந்து முன் வைக்கப்படுகிறது. இதுவரை அதில் எத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டது? இந்தியாவின் நிலைப்பாடு மிகத் தெளிவானது. மாகாணசபை முறைமைக்கு மேலாக எதுவுமில்லை. அதைக்கூடத் தமிழ்மக்கள் விரும்பும் வகையில் கொடுக்க வேண்டும் என்று இலங்கையை வலியுறுத்தும் நிலையில் இன்று இந்தியா இல்லை. உலக அரசியலும் அதில் இந்திய இலங்கை உறவும் மாற்றமடைந்து விட்டன.

இலங்கையில் தமிழ் மக்களை வைத்துத் தான் தனது தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நிலை இந்தியாவுக்கு இப்போது இல்லை. அதற்கு மேலாக இந்தியாவிலேயே மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை மையப்படுத்தும் போக்கு அதிகரித்து வருவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. அவ்வாறான ஒரு நிலையில் அந்த அரசாங்கத்தின் துணை ஜனாதிபதியிடம் சமஷ்டி அல்லது கூட்டாட்சிக் கோரிக்கையை முன் வைப்பதில் பயனேதும் இருக்குமா?

ஆனால் இந்தியத் துணை ஜனாதிபதி மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இலங்கை ஜனாதிபதியிடம் தான் கேட்டுக் கொண்டதாக தமிழ்த் தலைவர்களுக்கு ஒரு வரியில் இந்தியாவின் நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தியுள்ளார் போலத் தெரிகிறது. மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென வலியுறுத்தும், அழுத்தம் கொடுக்கும் நிலையில் இன்று இந்தியா இல்லை. அதற்கு அந்தத் தேவையுமில்லை.

அந்த நிலையை இந்தியாவுக்கு ஏற்படுத்தும் நிலையில் இலங்கைத் தமிழ்த் தரப்பும் இல்லை. மாறிவரும் தேசிய,சர்வதேச அரசியலைப் புரிந்து கொண்டு தமிழ்த்தரப்பு அதற்கேற்ற வகையில் தன்னை மாற்றிக் கொள்ளாத விடத்து வெறும் சந்திப்புக்களும் கோரிக்கைகளும் படக் காட்சிகளுமே தொடரும். எந்த விளை பயனும் ஏற்படப்போவதில்லை.

# பூவா? தலையா? பந்தயம்!

கட்டுரையாளர்:
- அழகு.குணசீலன் -




பந்தயம் கட்டுதல் நமக்கும் ஒன்றும் புதிதல்ல. ஆனால் அது இன்று சர்வதேச மட்டத்திலான நிதிச்சந்தை முதலீடாக மாறியிருப்பது தான் புதுச்செய்தி. வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மடோரோவை அமெரிக்க அரச பயங்கரவாதம், அத்துமீறி கடத்தியது நாம் அறிந்தது தான். 2026 ஜனவரி இறுதியில் இடம்பெற்ற இந்த அமெரிக்க இராணுவ நடவடிக்கைக்கு பின்னால் ஒரு பந்தயமும் இருந்தது என்பது இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அது மட்டும் அல்லாமல் இது விடயமாக எதிர்வு கூறல்களைச் செய்த அந்த மூன்று நபர்களும்'' சாதாரண பிரஜைகளா? அல்லது அமெரிக்க ட்றம்ப் நிர்வாகத்தின் மேல்மட்டத்துடன் தொடர்புள்ள புள்ளிகளால் பயன்படுத்தப்பட்டார்களா? என்ற கேள்வியும் இன்று உலகில் உரத்து ஒலிக்கிறது.

இந்திய இலங்கை தேர்தல்களில், இந்திய - பாகிஸ்தான் - இலங்கை கிரிக்கெட் ஆட்டத்தில் வெற்றி - தோல்வி குறித்து, காலநிலை மற்றும் சோதிட எதிர்வு கூறல்கள் மூலம் பந்தயம் கட்டுவதை நாம் அறிந்திருக்கிறோம், பந்தயம் கட்டியும் இருக்கிறோம். பந்தயத்தில் தோற்று மீசையையும் வழித்து, மொட்டையும் அடித்தவர்கள் நம் மத்தியில் இன்னும் இருப்பார்கள். ஆனால் அந்த எதிர்வு கூறல்களை ஒழுங்கமைக்கப்பட்ட, நிறுவனமயப்படுத்தப்பட்ட முதலீட்டு நிறுவனங்களின் பந்தயத்தில் முதலீடு செய்வது ஒரு புதிய முதலீட்டு முயற்சி. பங்குச்சந்தையில் முதலீடு செய்வது போன்றது. ஒரு வகையில் அதைவிடவும் இலாபகரமானது. முதலாளித்துவம் பேசுகின்ற உலகமயமாக்கம், தாளார பொருளாதாரம், டிஜிட்டல் தொழில் நுட்ப சந்தைப் பொருளாதாரம் ஊகங்களால் கட்டி எழுதப்படும் ஒன்று.

அமெரிக்கா ,வெனிசுவேலா ஜனாதிபதி மடோரோவை கடத்துகின்ற இரகசிய இராணுவ நடவடிக்கையில் பங்கு கொண்ட அமெரிக்க படைவீரர் ஒருவர் அந்த தகவலை எதிர்வு கூறல் அடிப்படையில் பந்தயம் கட்டி 40,000 அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாக பணத்தை பந்தய வெற்றி நிதியாக பெற்றிருக்கிறார் என்பது வெளிவந்துள்ளது.

உள்ளக வர்த்தகம் (INSIDER HANDEL) என்று சர்வதேச ஊடகங்களால் பேசப்படும் இந்த சமகால விவகாரம் தொடர்பாக அந்த இராணுவ வீரர் நீதிமன்றத்தில் நிறுத்தப் படவுள்ளார். இராணுவ வீரர் ஒருவருக்கான இரகசிய பாதுகாப்பு கட்டுப்பாட்டை மீறி, அந்த இரகசிய தகவலை எதிர்வு கூறலாக முதலீடு செய்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. குற்றம் நிரூபிக்கப் பட்டால் பல பத்து ஆண்டுகள் கம்பி எண்ண வேண்டும் என்று கூறப்படுகிறது.

தகவல்களின் படி முன் கூட்டியே ஊகிக்கும் கருத்துத்தளம் ஒன்றில், தனது இரகசிய தகவலை மடோரோ ஜனவரி இறுதியில் பதவியில் இருக்க மாட்டார் என்று பந்தயம் கட்டி, நாலு இலட்சத்திற்கும் சற்று அதிகமான அமெரிக்க டொலர்களை வென்றுள்ளார். அந்த பந்தயத்திற்காக அவர் 33,000 அமெரிக்க டொலர்களை கட்டியதாக தெரிய வருகிறது. 38 வயதான இவர் இவ்வாண்டு ஜனவரி ஆரம்பத்தில் இடம்பெற்ற மடோரோவை கடத்தும். அமெரிக்க அரச பயங்கரவாத இராணுவ நடவடிக்கையில் பங்கு பற்றியவர் என்பது தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

இன்றைய உலகில் மூன்று முன்னணி எதிர்வு கூறல் பந்தய போட்டி தளங்களாக POLYMARKET- KALSHI- PREDICTET" என்ற மூன்று நிறுவனங்கள் இந்த வியாபாரத்தில் முன்னணியில் உள்ளன. குறிப்பிட்ட இராணுவ வீரர் பொலிமார்க்கட்டில் பந்தயம் கட்டியிருந்தார். இன்னும் இருவர் இந்த தகவலை அடிப்படையாகக் கொண்டு மற்றைய இரண்டு நிறுவனங்களில் பந்தயம் கட்டியுள்ளனர். இந்த மூவரின் அடையாளங்களோ, தேசியங்களோ இதுவரை வெளிப்படுத்தப் படவில்லை. மூவரும் மொத்தமாக, மூன்று நிறுவனங்களில் இருந்தும் 6,30,000 அமெரிக்க டொலர்களை வென்றார்கள் என்று தெரியவருகிறது. இராணுவ வீரர் தனது வெற்றிப் பணத்தை மற்றொரு கணக்கிற்கு மாற்றிய பின்னர் பொலிமார்க்கட்டில் இருந்த தனது கணக்கை மூடும் படியும்,தனது அடையாளங்களை மறைக்கும் படியும் அந்த நிறுவனத்திற்கு கூறியதாக விசாரணை தகவல்கள் கூறுகின்றன.

சந்தேகத்திற்கு இடமான இந்த எதிர்வு கூறல் பந்தயக் கணக்குகள் மடோரோ கடத்தப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னரே திறக்கப்பட்டுள்ளன. இந்த வியாபாரத்தின் மூலம் இவற்றை நடாத்தும் தளங்கள் அதிக வருவாயை பெற்று வருகின்றன. பொலிமார்கட் 2020 இல் 9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வளர்ச்சியை தாண்டியதாக கூறப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு விடயம் குறித்த எதிர்வு கூறல், அல்லது முன்கூட்டிய கணிப்பு சாதாரண கருத்துக்கணிப்பல்ல என்பது கவனத்தில் கொள்ளப் பட வேண்டிய ஒன்று.

இது கணிதவியலில் நிகழ்தகவு என்று கூறப்படுகிறது. உதாரணமாக ஒரு நாணயக்குற்றியை சுண்டினால் எங்களுக்கு கிடைக்கக்கூடிய நிகழ்தகவு (விடை) 2:1 அல்லது 100:50 வீதம். அதாவது பூ தலை இரண்டில் ஏதாவது ஒன்றே எமக்கு விழும் நிட்சயமான சாத்தியம் உள்ளது. மடோரோ கடத்தப்படுவதற்கு முன்னர் அதன் சாத்தியப்பாட்டிற்கான நிகழ்தகவு வெறும் 8 வீதமாகவே இருந்துள்ளது. இதன் மறுபக்கம் பந்தயத்தில் கூறப்பட்ட 92 வீதம் மடோரோ ஜனவரி இறுதியில் பதவியில் இருப்பார்.: பதவி இழக்க மாட்டார் என்பதாக இருந்துள்ளது. கடத்தலுக்கு பின்னர் நிகழ்தகவு 100 வீதமாக தலைகீழாக மாறிவிட்டது. இங்கு பதவி இழக்க மாட்டார் என்ற எதிர்வுகூறலுக்கான நிகழ்தகவு பூச்சியம்.

இந்த விவகாரம் அமெரிக்காவில் எதிர்பார்க்காத அளவுக்கு பேசுபொருளாக மாறியிருக்கிறது. இந்த தகவல் ட்ரம்பின் நெருங்கிய கூட்டாளிகளுக்கு ஊடாகவும், ட்ரம்பின் மகன் ஊடாகவும் கசிந்திருப்பதற்கான நிகழ்தகவும் அதிகமாகவே தெரிகிறது. ஜனாதிபதி ட்ரம்பின் மகன் குறிப்பிட்ட பொலிமார்க்கட் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் சபையில் ஒருவர் என்ற செய்தி இந்த கசிவுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக உள்ளது. ஈரான் மீதான அமெரிக்க தாக்குதலுக்கு முன்னரே எண்ணெய் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பை பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எது எப்படியோ பந்தயம் கட்டுதல் எதிர்காலத்தில் ஒரு சிறந்த, இலாபகரமான முதலீட்டு முயற்சி மாதிரியாக, மற்றைய நிதி முதலீட்டு மாதிரிகளை விடவும் முந்தப்போகிறது. பந்தயம் கட்டுவோம் வாரீர்!



# காட்சிப் பொருளாகும் கொண்டாட்டங்கள்!

- பழ. அசோக்குமார் -

தமிழர் பண்பாட்டு வரலாற்றில் திருவிழாக்களும் இல்லச் சடங்குகளும் வெறும் களியாட்டங்கள் அல்ல. அவை சமூகப் படிநிலைகளில் சிதறிக் கிடக்கும் உறவுகளை ஒரு புள்ளியில் பிணைக்கும் கண்ணுக்குத் தெரியாத இழை. ஊர் கூடித் தேர் இழுப்பதும், பந்தி விசாரிப்புகளும் ஒரு சமூகத்தின் கூட்டு மனசாட்சியை உரசிப் பார்க்கும் தருணங்கள்.

ஆனால் இன்றைய சமூக ஊடக யுகத்தில் கொண்டாட்டங்களின் ஆன்மா நசுக்கப்பட்டு, அவை வெறும் காட்சிப் பொருள்களாகவும், போலியான பாவனைகளாகவும் மாறி வருவது நம் காலத்தின் பண்பாட்டுத் துயரம்.

முன்பெல்லாம் திருமண வீடுகள் என்றால், அங்கு மனிதர்களின் அன்யோன்யம் வாசலில் இருந்தே தொடங்கி விடும். ஆனால் இன்று, ஒரு திருமண மண்டபத்துக்குள் நுழைந்தால் நாம் காண்பது உறவுகளின் நெருக்கத்தை அல்ல. மாறாக நிழற்படக் கருவிகளின் ஒளிக்கற்றைகளைத் தேடி அலையும் மனிதர்களைத் தான்.

இன்றைய சடங்குகள் அனைத்தும் ஒரு நாடக மேடைபோல மாற்றப்பட்டு விட்டன. மணமக்களின் அக உணர்வுகளை விட நிழற்படக் கலைஞரின் கோணங்களே முதன்மை பெறுகின்றன. தாலி கட்டும் புனிதமான அந்த விநாடியில் கூட உற்றார் உறவினர்களின் வாஞ்சையான பார்வையை விட, அறிதிறன் பேசிகளின் செயற்கை வெளிச்சமே அந்த இடத்தை ஆக்கிரமிக்கிறது. இது உறவுகளின் சங்கமம் என்பதை விட பிம்பங்களின் சந்தை என்றே சொல்லத் தோன்றுகிறது.

இன்றைய கொண்டாட்டங்கள் வாழ்வதற்காக அல்ல. பதிவிடுவதற்காக மட்டுமே என்று மாறிவிட்டது. ஒரு மங்கல நிகழ்வுக்குச் செல்பவர்கள், அங்குள்ளவர்களிடம் நலம் விசாரிப்பதைக் காட்டிலும், அங்குள்ள அலங்காரங்களையும் உணவுகளையும் சமூக ஊடகங்களிலும், தங்கள் வாட்ஸ் ஆப்பிலும் நிலைத் தகவலாக பதிவிடுவதிலேயே குறியாக இருக்கிறார்கள். உதாரணமாக, ஒரு பிறந்த நாள் கொண்டாட்டத்தில் மெழுகுவர்த்தி அணைக்கப்படும் போது அங்கிருப்பவர்கள் பாடும் வாழ்த்துப் பாடல் உண்மையான மகிழ்ச்சியில் ஊற்றெடுப்பதில்லை.



அது காணொலியில் சரியாகப் பதியப் பட வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் ஒரு போலி ஒத்திகையாகவே இருக்கிறது. ஒளிப்படக் கருவி அணைக்கப்பட்ட அடுத்த விநாடியே, அந்த அறையில் மௌனம் குடியேறுகிறது. ஒவ்வொருவரும் தங்கள் பதிவுக்கு எத்தனை பாராட்டுகளும், விருப்பக் குறியீடுகளும் கிடைத்தன என்று எண்ணத் தொடங்கி விடுகின்றனர். இது கொண்டாட்டத்தின் நேரடி அனுபவத்தை முற்றிலுமாகச் சிதைத்து விடுகிறது.

பந்தி விசாரிப்பு என்பது தமிழ்ப் பண்பாட்டின் ஆகச்சிறந்த அடையாளம். பரிமாறுபவரின் அன்பும், உண்பவரின் திருப்தியும் அங்கு உரையாடல்களாக மாறும். ஆனால் இன்று, இலை போடப்பட்டவுடன் கைகள் முதலில் அறிதிறன் பேசியைத் தான் தேடுகின்றன. அந்த உணவின் சுவையை நாவால் அறியும் முன்பே, அகிலம் அறியச் செய்கிறார்கள்.

முன்பெல்லாம் உணவின் தரமும் ருசியும் பேசப்படும் இன்று அந்த உணவைப் படம் பிடித்த கோணம் பேசப்படுகிறது. பந்தியில் அருகருகே அமர்ந்திருப்பவர்களிடம் ஒரு புன்னகையைப் பரிமாறிக் கொள்ளக் கூட நேரமில்லாமல், கண்ணுக்குத் தெரியாத இணைய நண்பர்களுக்குப் பதில் சொல்வதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். இது பந்தி கலாசாரத்தின் மற்றொரு கோணமாக மாறிவிட்டது. கிராமத்து திருவிழாக்களில் ஜாதி, மத பேதமின்றி மக்கள் ஒன்றுகூடிய மந்தை கலாசாரம், இன்று வாட்ஸ் ஆப் குழு கலாசாரமாகச் சுருங்கி விட்டது. ஊர்த்திருவிழாக்களில் கூட, முன்னின்று வேலை செய்பவர்களை விட தற்படம் எடுப்பவர்களின் எண்ணிக்கையே அதிகம். பாரம்பரியக் கலைகள் அவற்றின் கலைத் தன்மைக்காக ரசிக்கப்படாமல், இணையப் பக்கங்களை அலங்கரிக்கும் பின்னணி இசையாக மாற்றப்படுவது பண்பாட்டுச் சிதைவின் உச்சம்.

கொண்டாட்டங்கள் என்பவை ஒருவருக்கொருவர் அன்புடன் நலன் விசாரித்து, மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் களம். ஆனால், .இன்று ஒரு துக்க வீட்டில் கூட கைப்பேசியில் படம் பிடிப்பவர்களைக் காண முடிகிறது. உணர்வுகளின் வெளிப்பாடாக இருந்த கண்ணீரும், புன்னகையும் இன்று வெறும் குறியீடுகளின் கூடாரங்களாகி விட்டன.

உறவினர்களுடன் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்த காலங்கள் போய், இப்போது படங்களை மட்டும் அனுப்புங்கள், அப்புறம் பேசலாம் என்று சொல்லும் இயந்திரத்தனமான மனிதர்களாக நாம் மாறிவிட்டோம்.

இந்தத் தொடர் ஓட்டத்தில், அடுத்த தலைமுறைக்கு உறவுகளின் பெயரோ அல்லது அவற்றின் ஆழமோ தெரியாமல் போகும் அபாயம் உள்ளது. இந்த மாற்றத்துக்குப் பின்னால் ஓர் ஆபத்தான உளவியல் ஒளிந்திருக்கிறது. தான் மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்பதை விட தான் மகிழ்ச்சியாக இருப்பதாக மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வதில் மனிதர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். மற்றவர்களின் அங்கீகாரத்துக்காக வாழத் தொடங்குவது ஒரு சமூகத்தின் ஆன்ம பலத்தைக் குறைத்து விடும். (18ம் பக்கம் பார்க்க)

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


SWARA SANGAMAM
2026
Sparkline
ENTERTAINMENT INC.
PASS
MEDIA
Selva's
SHASTHRA BAND
PICKERING CASINO RESORT
June 06, 2026 | 6:01 PM
(647) 336-5529
sparklinecanada@gmail.com
Exclusive Media Partner
www.MAKILCHI.ca
Premier
Healthcare Network
102.7
east FM
தமிழ்
வெற்றிகொள் தமிழா!
Ramanan
தமிழன்
வழிகாட்டி
ஈழநாடு
DON VALLEY NORTH
TOYOTA
Senior Sales & Lease Consultant
Jega Kanapathypillai
ELITE MD AESTHETICS
MEDICAL, COSMETIC & LASER CLINIC
SHAN
THAYAPARAN
TEAM
KARTHIKA
SUPERMARKET
Conditions apply *. All rights reserved by Sparkline Entertainment Inc.

# இந்தியத் துணை ஜனாதிபதி தமிழரசுக்கட்சிக்கு சொல்லாமல் சொன்ன செய்தி என்ன?

இந்தியத் துணை ஜனாதிபதி ராதா கிருஷ்ணன் கொழும்புக்கு வந்திருந்த போது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் முடிவில் அவர் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஆகிய இருவருடைய கைகளையும் பிடித்தபடி ஒரு விடயத்தை சொன்னவர் என்று சிவஞானம் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

உங்கள் மத்தியில் கட்சிகள் அதிகரித்து விட்டன. இதனை ஓர் ஒழுங்குக்குள் கொண்டு வாருங்கள் என்று இந்தியத் துணை ஜனாதிபதி தம்மிடம் கூறியதாக சிவஞானம் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இந்தியத் துணை ஜனாதிபதி கூறியதை அப்படியே வெளிப்படையாக சிவஞானம் விளங்கியிருப்பார் போல் தெரிகிறது. ஏனென்றால் ஊடகங்களுக்கு அவர் அது தொடர்பாகப் பேசிய போது அதை உணரக்கூடியதாக இருந்தது.

ஆனால் ஒரு துணை ஜனாதிபதி அவ்வாறு கூறுகிறார் என்றால், அதுவும் இரண்டு பேருடைய கைகளையும் பிடித்துக் கொண்டு அதை கூறுகிறார் என்றால், அதை அப்படியே வெளிப்படையாக விளங்கிக் கொள்ள வேண்டுமா? அல்லது அதற்குள் வேறு அர்த்தங்கள் உட்பொதிந்து இருக்கக் கூடுமா? அதாவது இந்தியத் துணை ஜனாதிபதி ராஜதந்திர பரிபாஷையில் சிவஞானத்துக்கும் சிறீதரனுக்கும் வேறு எதனையோ உணர்த்த முற்பட்டாரா?

ஈழத் தமிழர்கள் மத்தியில் அதிகம் கட்சிகள் உண்டு தான். ஆனாலும் அது தமிழ்நாட்டில் உள்ளவற்றை விடவும், தென்னிலங்கையில் உள்ளவற்றை விடவும் அதிகமானது அல்ல. மேலும் எத்தனை நூறு கட்சிகள் இருந்தாலும் நடைமுறையில் மூன்று கட்சிகள் தான் முன்னிலையில் நிற்கின்றன. தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியப் பேரவை, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவை மூன்றும் தான். தேர்தலில் இவை மூன்றும் தான் ஒப்பீட்டளவில் அதிக ஆசனங்களைப் பெறுகின்றன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குகள் சிதறியது உண்மை. ஆனாலும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மேற்சொன்ன மூன்று கட்சிகளுக்கும் கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகம்.

எனவே இந்தியத் துணை ஜனாதிபதி கட்சிகள் அதிகம் என்று கூறியது வேறு எதையோ குறிக்கிறது என்று உணரக்கூடியதாக உள்ளது. உள்ளதில் பெரிய கட்சியாகிய உங்களுடைய கட்சிக்குள்ளேயே இரண்டு பிரிவுகள் என்பதனை அவர் இராஜதந்திர பரிபாசையில் கூறினாரா? அதை சிவஞானம் அப்படியே வார்த்தைக்கு வார்த்தை விளங்கிக் கொண்டு விட்டாரா?

தமிழ்த் தேசிய அரசியலில் உள்ளவற்றுள் பெரிய கட்சி தமிழரசுக் கட்சி. அது ஏனைய கட்சிகளுக்கு முன்மாதிரியாக தன்னை ஓர் உருகிப் பிணைந்த கட்டமைப்பாகப் பேண முடியவில்லை என்பது எந்த ஒரு சின்னப் பிள்ளைக்கும் தெரியும். ராதாகிருஷ்ணன் தமிழரசுக் கட்சியின் இரண்டு முக்கியஸ்தர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு அதைக் கூறியிருக்கிறார். எனவே அங்கு அவர் கூற வந்த விடயம் நேரடியாக தமிழரசுக் கட்சிக்குரியது என்று எடுத்துக் கொள்ளலாமா?

சிவஞானம் பதில் தலைவராக இருப்பதே அந்த முரண்பாட்டின் விளைவு தான். சுமந்திரன் பதில் செயலாளராக இருப்பதும் அதனால் தான். ஆனால் அப்படி எந்த முரண்பாடும் தங்களுக்குள் இல்லை என்று சிவஞானம் இடைக்கிடை கூறிக் கொள்வதுண்டு.



எனினும் உண்மை நிலவரம் அதுவல்ல என்பதனை சமூக வலைத்தள சூழல் நமக்கு உணர்த்துகின்றது. இந்த விடயத்தில் ஆகப்பிந்திய ஓர் உதாரணத்தை இங்கு காட்டலாம்.

அண்மையில் தையிட்டி விவகாரம் தொடர்பாக காணி உரிமையாளர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் தந்தை செல்வா கலையரங்கில் சந்தித்தார்கள். இந்தச் சந்திப்பின் பின்னணியில் சிறீதரன் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்து ஒன்றை இங்கு சுட்டிக்காட்டலாம்.

கிளிநொச்சியைத் தளமாகக் கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாருக்கு எதிரான கருத்துக்கள் அவை. சந்திரகுமாரும் தானும் ஒரே கூட்டுக்குள் இருக்க முடியாது என்று பொருள் கொள்ளத்தக்க விதத்தில் சிறீதரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனால் சந்திரகுமாரும் சுமந்திரனும் நெருக்கமாக இருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. கிளிநொச்சியில் சிறிதரனுக்கு எதிராக சுமந்திரன் சந்திரகுமாரை நெருங்கிச் செல்கிறார் என்பது தான் வெளிப்படையாகத் தெரியும் உண்மை. அந்த முரண்பாட்டைத்தான் சிறீதரன் ஊடகங்கள் முன் வெளிப்படுத்தினார்.

இது தமிழ்த் தரப்பில் உள்ள பெரிய கட்சியின் நிலை. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த அதேயளவு ஆசனங்கள் தான் தமிழ்ப் பகுதிகளில் அரசாங்கத்துக்கும் கிடைத்தன. எனவே தமிழ்த் தரப்பு எனப்படுவது இப்பொழுது தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, நானும் தான் என்று அரசாங்கம் கூறக் கூடியதாக இருக்கிறது.

இந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டே இந்தியத் துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அவ்வாறு கூறியிருக்கலாம்.

மேலும் தன்னுடைய பிரதான கோரிக்கைகளில் தமிழ்த்தரப்பு ஒன்றாக இல்லை.ஒரு பகுதி மாகாண சபைத் தேர்தலைக் கேட்கிறது. இன்னொரு பகுதி புதிய யாப்பை நோக்கி முன்மொழிவைத் தயாரிக்க வேண்டும் என்று சொல்கிறது. புதிய யாப்பை நோக்கித் தமிழ்த் தரப்பானது பொதுவான முன்மொழிவை வைக்க வேண்டும் என்ற விடயத்தில் கட்சிகள் தாங்களாக இணைய முடியாதவைகளாகக் காணப்படுகின்றன. அதனால் வெளியில் இருந்து சிவில் சமூகங்கள் அதில் தலையிட வேண்டி ஏற்பட்டது. தமிழ் சட்டத்தரணிகள் சங்கம், தமிழ் ஆயர்கள் சங்கம், யாழ்ப்பாண ஊடக அமையம் போன்றன இந்த விடயத்தில் ஏன் தலையிட வேண்டி வந்தது? கட்சிகள் தாங்களாக ஒன்றிணைய முடியவில்லை என்பதனால் தானே?

அது மட்டுமல்ல ஒரு புதிய யாப்பை நோக்கிப் பொதுவான முன்மொழிவைத் தயாரிக்கும் விடயத்திலும் கூட தமிழ்த் தரப்பில் இப்பொழுது நான்கு வெவ்வேறு முன்னெடுப்புகள் உண்டு. முதலாவது ஐக்கிய ராஜ்யவை அடுத்தடுத்த கட்டத்திற்கு வளர்த்துச் செல்வது.

இரண்டாவது 13ஆவது திருத்தத்திலிருந்து தொடங்கி அடுத்தடுத்த கட்டத்துக்கு போவது. மூன்றாவது சமஸ்டி. நான்காவது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு வெகுசன வாக்கெடுப்பை வைப்பது. அதாவது அரசறிவியல் வார்த்தைகளில் சொன்னால், ஒப்பம் கோடலுக்கான'' -Plebiscite- ஒரு தேர்தலை நடத்துவது.

இந்த நான்கு தரப்புகளும் ஒன்று மற்றதைக் குற்றம் சாட்டுகின்றன. கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளிலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஏற்பாடுகள்.தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை அடித்தளமாகக் கொண்ட தமிழ்த் தேசியப் பேரவையானது, யாப்பு நிர்ணய பொதுச் சபை ஒன்றை அறிவித்திருக்கிறது. இது சில மாதங்களுக்கு முன்பு இளம் கலைஞர் மண்டபத்தில் நடந்த சிவில் அமைப்புகளுடான சந்திப்பில் தீர்மானிக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு ஆகும்.

இந்த அறிவிப்பு சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னெடுப்புக்களுக்கு எதிரானது என்று தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கருதுவதாகத் தெரிகிறது. ஆனால் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னெடுப்புக்கு முன்னரே முன்னணி இதைத் தொடங்கி விட்டது. சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னெடுப்புகளில் முன்னணிக்கு சில அதிருப்திகள் இருப்பதாகவும் அறிய முடிகிறது. சட்டத்தரணிகள் சங்கம் முன்னர் முன்னணிக்கு நெருக்கமானது என்று பார்க்கப்பட்டது. ஆனால் அந்தச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டாவது சந்திப்பில் தமிழ்த் தேசியப் பேரவையாக முன்னணி கலந்து கொள்வதில் நெருக்கடிகள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. தமிழ்த் தேசியப் பேரவையில் உள்ள கட்சிகள் அதில் மெய்நிகர் ஏற்பாட்டுக்கூடாகக் கலந்து கொள்வதற்கு சட்டத்தரணிகள் அமைப்பு அனுமதிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

அதனால் தான் முன்னணியானது அரசியலமைப்பு நிர்ணய பொதுச் சபை என்ற அறிவிப்பை வெளியே விட்டது என்று ஏனைய கட்சிகள் சந்தேகிக்கின்றன. சட்டத்தரணிகள் சங்கம் ஒரு புதிய யாப்புக்கான பொதுவான தமிழ் முன்மொழிவைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கும் பொழுது தமிழ்த் தேசியப் பேரவையும் இவ்வாறு அரசியலமைப்பு நிர்ணய சபை என்று அறிவிப்பை வெளியிட்டிருக்கத் தேவையில்லை என்று ஏனைய கட்சிகள் கருதுவதாகவும் தெரிகிறது.

ஆனால் சட்டத்தரணிகள் அமைப்பின் முன்னெடுப்புக்கு முன்னரே முன்னணி இது தொடர்பான சந்திப்பை சிவில் சமூகங்களோடு மேற் கொண்டு விட்டது. இளங் கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்ற அந்தச் சந்திப்பின் விளைவாக உருவாக்கப்பட்டது தான் மேற்படி அரசியலமைப்பு நிர்ணய பொதுச் சபை ஆகும். ஆனால் அது வேகமாக இயங்கவில்லை. அதைவிட வேகமாக சட்டத்தரணிகள் அமைப்பு செயல்படுவதாகத் தெரிகிறது. அதனால் தான் எது முதலில் தோன்றியது என்ற குழப்பம் ஏற்படுகிறது

எதுவானாலும் ஒரு புதிய யாப்பை நோக்கிக் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளில் ஒன்றிணைந்த போக்கு இல்லை என்று தெரிகிறது. மேலும் ஒரு பொதுவான முன்மொழிவை முன்வைப்பதிலும் வேறுபட்ட பார்வைகள் இருப்பதாகத் தெரிகிறது.


இவ்வாறு பிரதானமான ஒரு விடயத்திலேயே தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு இடையே ஐக்கியப்பட முடியாதவைகளாகக் காணப்படும் ஒரு சூழலை முன் வைத்துத் தான் அவ்வாறு கூறியிருக்கலாம்.

உள்ளதில் பெரிய கட்சி தானே தன்னளவில் ஓர் உருகிப் பிணைந்த அமைப்பாக இயங்க முடியாத ஒரு சூழலில், ஒரு பெரிய கட்சியாக, தீர்மானிக்கும் கட்சியாக ஏனைய கட்சிகளையும் அரவணைத்துக் கொண்டு போகத் தயாரற்ற ஒரு சூழலில்,. அரசாங்கம் தானும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக உலக அரங்கில் கூறிக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் தமிழ்த் தரப்பானது ஒரு தேசமாக ஒரே பலமான திரட்சியாக இல்லை என்றால் அதனை வெளித்தரப்புக்கள் எப்படி அணுகுவது?

**– நிலாந்தன் –**


Secure. Grow. Protect.
Your Future, Your Terms - Protect What Matters
KRISHNA SABARATNAM
Insurance & Investments
I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.

# முதலில் எது தேவை? போர் நிறுத்தமா? அணுஆயுத உற்பத்தி நிறுத்தமா? அமெரிக்காவிடம் ஈரான் முன்வைக்கும் புதிய நிபந்தனை!





ஈரான் அமெரிக்க போர் நிறுத்தம் இரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவை நோக்கி ஈரான் முன்வைத்துள்ள புதிய நிபந்தனைகள் பாகிஸ்தான் மத்தியஸ்த குழுவிடம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அந்த புதிய வரைவுத் திட்டத்தை அமெரிக்கா அக்சியோஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

ஈரான் இரண்டு கட்டங்களாக அமெரிக்காவிடம் முன்வைத்துள்ள புதிய நிபந்தனைகள் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன,

முதலில் போர் முழுமையாக நிறுத்தப்படவேண்டும். ஈரான் மற்றும் லெபனான் ஆகிய இரு நாடுகளின் மீதும் தாக்குதல் நடத்தப்படாது என்பதை உறுதி செய்யவேண்டும்.

இரண்டாவது, அமெரிக்க படைகள் பின்வாங்கப்பட்டு ஹோர்முஸ் நீரிணை திறக்கப்பட்டு கடல்வழிப் போக்குவரத்து சீர் செய்யப்படும். இது இரண்டும் நடந்தால் இறுதியாக அணு ஆயுத உற்பத்தியை நிறுத்துவது தொடர்பாக அமெரிக்காவிடம் ஈரான் விவாதிக்கும் என ஈரான் தெரிவித்துள்ளது.

அணு ஆயுத உற்பத்தியை முழுமையாக நிறுத்துவோம் என ஈரான் அறிவித்தால் மட்டுமே போர் நிறுத்தம் செய்யப்படும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வந்த நிலையில், அதற்கும் முன்கூட்டியே, போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்துவதே தமது முதல் நிபந்தனை, பிறகு அணு ஆயுத உற்பத்தி நிறுத்தம் தொடர்பாக பேசிக்கொள்வோம் என ஈரான் அறிவுறுத்தியுள்ளது.

ஈரான் பேச்சுவார்த்தைகளை நடத்த விரும்பினால் எங்களோடு தொலைபேசியில் பேசலாம். பாதுகாப்பாக பேசுவதற்கு எங்களிடத்திலும் தொலைப்பேசி இணைப்பில் உள்ளது என பொக்ஸ் நியூஸிடம் தெரிவித்த ட்ரம்ப், ஈரானின் கோரிக்கைகளுக்கு எவ்வித பதிலளிக்கப்போகிறார் என்பது சர்வதேசத்தின் பல்வேறு தரப்பினரிடையே எழுந்துள்ள எதிர்பார்ப்பாக உள்ளது.

இதேவேளை மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழலுக்கு மத்தியில், அமெரிக்காவின் மூன்றாவது விமானம் தாங்கி போர்க்கப்பலான 'யுஎஸ்எஸ் ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ்' குறித்த பகுதிக்கு சென்றடைந்துள்ளது.

இதன் மூலம் ஆயிரக்கணக்கான மேலதிக அமெரிக்க துருப்புக்களும், அதி நவீன போர் விமானங்களும் குறித்த கப்பலில் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. ஹோர்மூஸ் நீரிணையில் அண்மைக்காலமாக நீடித்து வரும் குழப்பமான நிலையைத் தொடர்ந்து, ஈரான் கடல் எல்லைக்கு அருகில் இக்கப்பல் நுழைந்துள்ளது.

அமைதிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்குவதற்கான எந்த அறிகுறியும் தென்படாத நிலையில் இந்த நகர்வு முக்கியத்துவம் பெறுகிறது. தற்போது இப்பகுதியில் 'யுஎஸ்எஸ் ஜெரால்ட் ஆர் ஃபோர்ட்' (USS Gerald R Ford) மற்றும் 'யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன்' (USS Abraham Lincoln) ஆகிய கப்பல்களுடன் ஜோர்ஜ் எச். டபிள்யூ புஷ் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஒரே பிராந்தியத்தில் மூன்று விமானம் தாங்கி கப்பல்கள் நிறுத்தப்படுவது 'மிகவும் அசாதாரணமானது' என பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யுஎஸ்எஸ் ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ்: 5,000 மாலுமிகள், 9 விமான படைப் பிரிவுகள் மற்றும் மூன்று டிஸ்ட்ராயர் (Destroyer) போர்க்கப்பல்கள் இதனுடன் இணைந்துள்ளன.

யுஎஸ்எஸ் ஜெரால்ட் ஆர் ஃபோர்ட்: உலகின் மிகப்பெரிய போர்க்கப்பலான இது, 90 போர் விமானங்களை தாங்கும் திறன் கொண்டது. இது தற்போது செங்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது.

ஒட்டுமொத்த நிலை: அமெரிக்க கடற்படையின் மொத்த கொள்ளளவில் சுமார் 40 சதவீதம் தற்போது மேற்காசியாவில் குவிக்கப்பட்டுள்ளன.

# இளவரசர் ஹரியின் கருத்தை நிராகரித்த ட்ரம்ப்!

உக்ரேன் மோதல் குறித்த இளவரசர் ஹரியின் கருத்துக்களை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிராகரித்ததோடு ஹரி இங்கிலாந்துக்காகப் பேசவில்லை என்றும் கூறியுள்ளார்.

23 ஏப்ரல் 2026 தினம் கீவ் பாதுகாப்பு மன்றத்தில் ஹாரி ஆற்றிய உணர்ச்சி மிக்க உரையைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கள் வெளியாகின.

அந்த உரையில் ஹரி, உலகப் பாதுகாப்பில் அமெரிக்கத் தலைமை வகிக்கும் நீடித்த பங்கில், வொஷிங்டன் தனது சர்வதேச ஒப்பந்தக் கடமைகளை மதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மன்னர் சார்ள்ஸின் இளைய புதல்வரான ஹரி, உலக விவகாரங்கள் குறித்து அரிதாகப் பேசிய போது, தான் ஒரு அரசியல்வாதியாக இங்கு வரவில்லை என்றும் மாறாக சேவையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட ஒரு சிப்பாயாகவும் ஒரு மனிதாபிமானியாகவும் வந்திருப்பதாகவும் தெளிவுபடுத்தினார்.

எனினும் இந்த உரையில் அவர் ட்ரம்பின் பெயரை நேரடியாகக் குறிப்பிடவில்லை. எவ்வாறெனினும் உக்ரேனுக்கு மேற்கொண்ட திடீர் பயணத்தின்





போது ஹாரி ஆற்றிய உரைக்கு பதிலளித்த அமெரிக்க ஜனாதிபதி செய்தியாளர்களிடம், எனக்கு ஒன்று மட்டும் தெரியும், இளவரசர் ஹாரி ஐக்கிய இராச்சியத்திற்காகப் பேசவில்லை, இளவரசர் ஹாரியை விட நானே ஐக்கிய இராச்சியத்திற்காக அதிகமாகப் பேசுகிறேன் என்று நினைக்கிறேன். இருப்பினும் அவருடைய ஆலோசனையை நான் மிகவும் மதிக்கிறேன் என்று கூறினார். 2022ஆம் ஆண்டு போர் தொடங்கியதிலிருந்து உக்ரேனுக்கு ஹாரி மேற் கொள்ளும் மூன்றாவது பயணமான, அவரது இந்த முன்னறிவிப்பில்லாத விஜயம், அவர் தனது மனைவியான சசெக்ஸ் கோமாரியுடன் அவுஸ்திரேலியா சுற்றுப் பயணத்தை முடித்த சில நாட்களுக்குப் பின்னர் நடைபெற்றுள்ளது.

இதேவேளை பிரித்தானிய மன்னர் சார்ள்ஸ் மற்றும் ராணி கமிலா ஆகியோர் நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக கடந்த திங்கட்கிழமை அமெரிக்கா சென்றடைந்துள்ளனர்.

அமெரிக்கா சுதந்திரம் பெற்று 250 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் வகையில் இந்தப் பயணம் அமைந்துள்ளது. விமான நிலையத்தில் தரையிறங்கிய மன்னரை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மெலனியா ட்ரம்ப் ஆகியோர் வரவேற்றுள்ளனர்.